




நடுநிலை இதழ்

# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



தினப்புயலில் சிறப்பு விளம்பரம்
விசேட விலைக் கழிவுடன் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க...
0778195947,
0776473692


மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -156



## பொட்டு அம்மான் லண்டனுக்குத் தப்பிச்செல்ல பயன்படுத்திய இரகசியக் குறியீடு "டெசி"

## மஹிந்தவின் கோவணத்தை உருவிய முஸ்லீம் அரசியல்வாதிகள், மைத்திரியின் கோவணத்தையும் உருவுவார்கள்



## தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் இருட்டடிப்புச் செய்கின்றது






-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொட்டு அம்மான் லண்டனுக்குத் தப்பிச்செல்ல பயன்படுத்திய இரகசியக் குறியீடு "டெசி"



இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலைசெய்வதற்கு விடுதலைப்புலிகள் பயன்படுத்திய குறியீடுதான் கஞ்சி குடிச்சாறு. இவ்விடயம் தொடர்பாக நாம் ஏற்கனவே பிரசுரித்திருந்தோம். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் உட்பட அவரின் சகாக்களையும் இராணுவம் அல்லது புலனாய்வுத்துறை கைதுசெய்யவில்லை. அவரைக் கைதுசெய்யும் அளவிற்கு அவரின் நிலைப்பாடுகளும் இருந்திருக்கவில்லை. இவ்வாறான நிலையில் இன்று அரசாங்கம் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அந்தவகையில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பு என்பது சர்வதேச ரீதியாக - வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வாறான நிலையில் அரசாங்கம் விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பினரைக் கைது செய்வதற்கான நீடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியாக தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையினர் செயற்பட்டு வருவதால் அவர்களுடைய செயற்பாட்டை முடக்குவதற்காக அரசாங்கம் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டுள்ளது. விடுதலைப்புலிகளின் விசேட் புலனாய்வுப் பிரிவினராகக் கருதப்பட்ட நகரப் புலனாய்வு, படையப் புலனாய்வு. உள்ளகப் புலனாய்வு. வெளிக்களப் புலனாய்வு. இரகசியப் புலனாய்வு. சர்வதேசப் புலனாய்வு, கட்டமைப்புப் புலனாய்வு, தேசியப் புலனாய்வு. அரசியல் புலனாய்வு. மத்திய புலனாய்வு என பன்னிரண்டு புலனாய்வுப் படைப்பிரிவுகள் இயங்கிவந்த நிலையில், இவையணைத்தும் ஒட்டுமொத்தமாக விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பினுடைய அல்பா. பீற்றா வரிசையில் டெசி என்று அழைக்கப்படுவதே விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பினுடைய குறியீட்டுப் பெயர். இந்த டெசிப் புலனாய்வில் அறுபத்தி நான்கு பிரிவுகள் உள்ளது. தேவையின் நிமித்தம் இக்குறியீடுகள் மாற்றம் செய்யப்படும்.

சண்டைக் களத்தில் டெசி இரகசியக்குறியீடுகள்பயன்படுத்துவதில் தளபதி ரமேஸ். சார்ள்ஸ், ஜெயம். தீபன். சங்கர். துரோணர் போன்றோர் அதிதேர்ச்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்புலனாய்வுக் கட்டமைப்பினருடைய செயற்பாடுகள் என்பது பரந்தளவில் இருப்பதனால் இதனைக் கட்டுப்படுத்துவது என்பது ச்ர்வதேசம் மற்றும் அரசினால் இயலாத காரியமாகும். தமிழீழ விடுதலைப்புலிகளுடைய ஆயுதப் போராட்டம் என்பது நீண்ட வளர்ச்சி கொண்டது. இப்போராட்டமானது முப்பது வருடகாலங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. இதனை குறுகிய கால எல்லைக்குள் மழுங்கடித்துவிட அரசாங்கம் முயற்சித்தால் அது முடியாத காரியம். எந்தவொரு நாட்டிலும் ஆயுதக்குழுக்களையோ அல்லது பயங்கரவாதிகளையோ முற்றாக ஒழித்த வரலாறு இல்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் பலம்வாய்ந்த ஆயுத அமைப்பாக உள்ளூரிலும். சர்வதேசத்திலும் வளர்ச்சி கண்டனர். தமக்கு ஆபத்தைத் தோற்றுவிக்கும் என்ற காரணத்தினால் சர்வதேச நாடுகள் விடுதலைப்புலிகள் அமைப்பின் போராட்டத்தை அழித்தொழிக்கும் நடிவடிக்கையை மேற்கொண்டது. போராட்டக் கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்டாலும் ஒரு அமைப்பினுடைய புலனாய்வுக் கட்டமைப்பை அழிப்பதென்பது எந்த அரசாங்கத்தினாலும் முடியாத காரியம். தற்பொழுது விடுதலைப்புலிகளுடைய நடவடிக்கைகள் 45 நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு ஆதரவாக 450 சர்வதேச அமைப்புக்கள் இருக்கின்றது.

அண்மையில் 450 சர்வதேச அமைப்புக்கள் இலங்கை அரசினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டமையை யாவரும் அறிந்ததே. சர்வதேச ரீதியில் ஏற்கனவே பொட்டம்மானுடைய புலனாய்வுக் கட்டமைப்பு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாக சுவிஸ், நோர்வே. கனடா, எரித்தெரியா, எத்தியோப்பியா, யூகஸ்லாவியா. செக்குடியரசு போன்ற நாடுகளில் இவர்களது புலனாய்வுக் கட்டமைப்புக்கள் தொடர்ச்சியாக இயங்கிவருகின்றன.

பொட்டு அம்மான் இலங்கையில் இருந்து தப்பிச்செல்கின்றபோது 25 இரகசியப் புலனாய்வினருடன் அந்நாடு நோக்கிச் சென்றிருந்தார். 250கடல் மைல்கள் தொலைவில் விடுதலைப்புலிகளின் வரவுக்காகக் காத்திருந்த எரித்தெரியாவின் விசேட நீர்மூழ்கிக் கப்பல் இவர்களை அழைத்துச்சென்றதாகக் கூறப்படுகிறது. விசேட டோராப்படகு ஒன்றின் மூலமாகவே பொட்டு அம்மான் சர்வதேச கடற்பரப்பினை அண்மித்திருந்தார். யுத்தம் நிறைவடைந்து 06 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் விடுதலைப்புலிகள் ஏன் இன்னமும் மௌனித்திருக்கிறார்கள் என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ள அதே நேரம் விடுதலைப்புலிகள் அனைத்து விடயங்களையும் அனைவருக்கும் தெரியப்படுத்திவிட்டு போராட்டத்தினை ஆரம்பிப்பதில்லை. ஆட்சி மாற்றத்திற்கு கூட விடுதலைப்புலிகளின் டெசியே காரணம் என ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.

மேற்கத்தேய நாடுகளிலும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பு பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. முள்ளிவாய்க்காலின் முற்றுகைக்குள் பொட்டு அம்மான் சிக்குண்டிருப்பார் என்றே இலங்கை அரசு நம்பியது. இறுதி முற்றுகையின் போது தேசியத்தலைவர் பிரபாகரனால் வகுக்கப்பட்ட வியூகத்திற்கு அமைய ஒவ்வொரு படையணிகளும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன. சரணடையும் அணியினர் பேச்சுவார்த்தைகளை நடாத்தி தமிழினத்திற்கான விமோசனத்தைப் பெற்றுக்கொடுக்க ஏனையவர்கள், அண்டைய நாட்டுக்கும், காடுகளுக்குள்ளும் தப்பிச்சென்று மீண்டும் போராட்டத்தை ஆரம்பிப்பது என்பதே அதற்கான திட்டமாகும். இத்திட்டத்தை வகுத்த பிரபாகரன் அதன் பின்னர் எந்தவொரு போராளிகளையும் சந்திக்கவில்லை. பிரபாகரனுக்கு அனைத்துவிதமான பாதுகாப்புக்களையும் வழங்குவதாகத் தெரிவித்திருந்த அமெரிக்கா. அதனை மறுத்த பிரபாகரன் போருக்காக இந்த மண்ணிலே மடிவேன் எனக்கூறியிருந்தார். இது அவர் தமிழர் தாயகம் மீது கொண்ட பற்றினையே காட்டுகின்றது. பொட்டு அம்மான் தப்பிச்செல்கையில் ஏன் பிரபாகரன் தப்பிச்சென்றிருக்கக்கூடாது என்பதே அனைவரின் கேள்வியாகும். இது இவ்வாறிருக்க. விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பின் டெசி என்பது கடந்த 30 வருட காலங்களாக [illegible] ராஜீவ்காந்தியின் கொலையில் பயன்படுத்தப்பட்ட கஞ்சிகுடிச்சாறு என்பது டெசியின் ஒரு பிரிவாகும். இது குளிர்பாணமா. ஆற்றினைக் குறிக்கிறதா என்பது இந்தியாவின் ரோவிற்கு குழப்பமாகவிருந்தது. இதுபோன்றதான ஒரு இராணுவப் புலனாய்வு நடவடிக்கையினை அமெரிக்கா கந்தகாரில் ஒசாமா பின்லேடனுக்குப் பயன்படுத்தியது. மியோ மியோஎன்பதே அக்குறியீடாகும். 500km தொலைவிலிருந்த ஒசாமாவினை தாக்கியழிப்பதற்கு விடுதலைப்புலிகளின் டெசியில் காணப்படும் ஒரு பிரிவான மியோ மியோவை அமெரிக்கா பயன்படுத்தியது. அந்த ஒபரேஷன் முடியும் வரை மியோ மியோ என்ற இரகசியக் குறியீடு பற்றி யாருக்கும் தெரியாது.

2ம் உலக மகா யுத்தத்தில் பயன்படுத்திய இரகசியக் குறியீடு மரமும் பறவையும் என்பதாகும். இக்குறியீடுகள் யுத்தம் முடிவடைந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரே கண்டறியப்படும். ராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்ட பின்னரே கஞ்சிகுடிச்சாறு என்ற குறியீடு பற்றி கண்டறியப்பட்டது. உலக வல்லரசுகள் கூட விடுதலைப்புலிகளின் டெசி என்கின்ற குறியீட்டினைப் பயன்படுத்தியே தாக்குதலை மேற்கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

2ம் உலகப்போரிலும் கூட விடுதலைப்புலிகளுடைய டெசி குறியீடின் ஒரு பகுதியான பேண்ட் என்ற குறியீடு பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மிக விரைவான தொழில்நுட்பத்துடன் பொட்டு அம்மான் அவர்கள் தப்பிச்சென்றிருப்பதை அரச மற்றும் சர்வதேச புலனாய்வினர் அறியாமல் போயினர். அறிந்திருக்க வாய்ப்புக்கள் இருந்தும் இந்தியாவின் புலனாய்வான ரோவும். பாகிஸ்தானின் உளவுப்பிரிவும் எவ்வாறு தவற விட்டனர் என்பது சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது. 2ம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட பேண்ட் என்பதை வைத்தே பொட்டு அம்மானுக்கு குருவி என்பது புனைபெயர் ஆக்கப்பட்டது. பல ஆண்டுகள் குருவி என்கிற பெயரிலே பொட்டு அம்மான் அவர்கள் செயற்பட்டு வந்தார்.

விடுதலைப்புலிகளின் 12 புலனாய்வுக் கட்டமைப்புக்களில் இறுதி நேரத்தில் காட்டிக்கொடுப்புக்கள் ஏற்படக் காரணம் சிறிதுகாலம் கேபியினது கையில் சர்வதேச புலனாய்வுக்கட்டமைப்புக்கள் ஒப்படைக்கப்பட்டமையேயாகும். கேபி [illegible] வைக்கப்பட்ட பின்னர் பல்வேறான பிரச்சினைகள் தோற்றம் பெற்றமையின் காரணமாக மீளவும் பொட்டு அம்மான் அவர்களிடம் விடுதலைப்புலிகளின் புலனாய்வுக் கட்டமைப்பு ஒப்படைக்கப்பட்டது. சர்வதேச ரீதியான விபரங்களை கேபி அவர்கள் பொறுப்பெடுப்பார் என அறிவிக்கப்பட்ட காலத்தில் கேபி அவர்கள் மலேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் டெசி என்கிற புலனாய்வினை மிக நுட்பமாக நகர்த்திவந்த பொட்டுஅம்மான் அவர்கள் இன்னமும் அதனை செயற்படுத்தி வருகிறார். ஒரு நாட்டினைப் பிடிப்பதற்கு அல்லது தக்கவைத்துக்கொள்வதற்கு. சதிப்புரட்சியின் மூலம் அரசாங்கத்தின் ஆட்சியைக்கவிழ்க்க ஒரு நாட்டின் புலனாய்வே அதற்கு உந்துசக்தியாக அமைகின்றது. படை பலமோ. தொழில்நுட்ப பலமோ இதனைச் சாதித்துவிட முடியாது. உதாரணமாக 1000பேர் கொண்ட ஒரு படை நகர்வை இராணுவத்தினர் நகர்த்தப் போகின்றனர் எனில் அதனது இரகசியக் குறியீடு பற்றி அறிந்தால் அவர்களை அவ்விடத்தில் வைத்தே அழித்துவிடலாம். அல்பா என்கிற குறியீடு பயன்படுத்தப்படுமாகவிருந்தால் இந்த 1000 இராணுவத்தினரும் நகர்த்தப்படும் பாதையினை மலையகம் வீதி எனப் பயன்படுத்துவர். இந்த மலையக வீதி அல்பா குறியீட்டில் எதனைக் குறிக்கிறது என்பதை அறிந்தால் அவ்வீதியில் வைத்தே அத்தனை இராணுவத்தினரையும் அழித்துவிடலாம். ஆங்கில எழுத்துக்களிலும் இந்த குறியீட்டு நடைமுறைகள் இருக்கிறது. இதனை பொட்டு அம்மான் அவர்கள் எவ்வாறு கற்றுக்கொண்டார் என்பதும் வியப்பானதொரு விடயம்.

விடுதலைப்புலிகளுடைய 30 வருடப் போராட்டத்தில் சர்வதேசத் தாக்குதல் உட்பட 24 உள்ளூர்த் தாக்குதல்கள் பொட்டு அம்மானின் டெசியின் மூலம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் மத்திய வங்கியின் தாக்குதலில் கருணா அம்மான் தொடர்புபட்டிருந்தாலும் செயல் வடிவம் கொடுத்தவர் பொட்டு அம்மான் அவர்களே. காலத்தின் தேவை கருதி விடுதலைப்புலிகளது புலனாய்வுக் கட்டமைப்பினர் தமது நடவடிக்கைகளை மிக விரைவாக நகர்த்தமுடியாத சூழ்நிலை. உருவாக்கப்பட்டுள்ளதே தவிர. பொட்டு அம்மானின் டெசி என்கிற புலனாய்வு தொடர்ந்தும் செயற்படுகிறது. அதனது செயற்பாடுகள் இனி எவ்வாறு அமையப்போகிறது என்பது பற்றி அடுத்து வெளிவரும் இதழில் பார்ப்போம்...

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழ் மக்களுக்கான அரசின் தீர்வுத்திட்டம் சாத்தியமற்றது

த.தே.கூட்டமைப்பு. வடமாகாணசபை என்பன தனித்தனியே தமது தீர்வுத்திட்டங்களை அரசாங்கத்திடம் கையளிக்க உத்தேசித்து. வடமாகாண சபை தீர்வுத்திட்டங்களை அரசிடம் கையளித்துள்ள நிலையில் மாவை சேனாதிராஜா. முதலமைச்சர் விக்னேஸ்வரன். சி.வி.கே.சிவஞானம். பிரதம செயலாளர் பத்மநாதன் ஆகியோருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றினால் அழைப்பாணையும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில். தமிழ் மக்கள் பேரவையும் தமது தீர்வுத்திட்டத்தினை வரைந்துள்ளது. இது த.தே.கூட்டமைப்பின் நகர்வை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாக கருதப்படுகின்றது. த.தே. கூட்டமைப்பானது வடகிழக்கு இணைந்ததுதான் தமிழர் தாயகம் எனவும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட 50இற்கும் மேற்பட்ட தீர்வுத்திட்டங்களை முன்வைத்தாலும் கூட மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கானத் தீர்வினை தமிழ் மக்களுக்கு வழங்க அரசு மறுக்கும். தென்னிலங்கை பேரினவாதக் கட்சிகளும் இதற்கெதிராக போர்க்கொடியினைத் தூக்குவார்கள். காணி. பொலிஸ் அதிகாரத்தினை அரசு வழங்குமாகவிருந்தால் அது தென்னிலங்கை அரசியலில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் கலவரத்தினையும் உருவாக்கும். சர்வதேச நாடொன்றின் துணையோடு இத்தீர்வுத்திட்ட வரைபுகள் நகர்த்தப்படுமாகவிருந்தால் அது தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையும்.

தமிழ் மக்களது போராட்டத்தை ஓரங்கட்டும் நடவடிக்கைகளில் சர்வதேசங்கள் இணைந்து செயற்பட்டன. 2004இன் காலப்பகுதியில் சமாதான பேச்சுக்கள் இடம்பெற்றபோது விடுதலைப்புலிகள் 20 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடகிழக்கில் இடைக்கால நிர்வாகத்தினைக் கோரியிருந்தனர். நோர்வேயின் தலையீட்டுடன் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் பலனாக விடுதலைப்புலிகளின் அரசியல் அமைப்பு இடைக்கால நிர்வாகத்தை ஓரிரு மாதங்கள் வடகிழக்குப் பகுதியில் மேற்கொண்டனர்.

இவ்வாறே விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தை தாம் தொடரவிட்டால் அனைத்துக் கட்டமைப்புக்களையும் உருவாக்கி தனிநாட்டுக்கோரிக்கையினையும் முன்வைத்துவிடுவார்கள் என்கின்ற காரணத்தினால் வடகிழக்குப் பகுதியில் நிர்வாகத்தினை மேற்கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் மீது அரசு மறைமுகமான தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தது. இக்கொலைக்கும். விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு இல்லை என கிழக்கிலிருந்து கருணா தெரிவிக்க அதனை அரசு ஏற்க மறுத்தது. இக்காரணத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் ஏதோவொரு கட்டத்தில் விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை ஆரம்பித்து போராட்டத்தை அழித்தொழிக்கும் சூழ்ச்சியோடு மாவிலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினை எனக்கூறி விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை ஆரம்பித்தது அரசு. மாவிலாறில் ஆரம்பித்த போரானது முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலையோடு நிறைவடைந்தது.

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தினை அரசாங்கம் அன்றே வழங்கியிருக்கவேண்டும். இதுவரை காலமும் யுத்தத்தைக் காரணங்காட்டி தமிழ் மக்களுக்கான தீர்வுகளை வழங்காத இலங்கையரசு மீண்டுமொருமுறை தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்களை வழங்கப்போகின்றதா?. பேச்சுக்கள் அனைத்தும் வெறுமனே பொழுது போக்காகவே நடந்துமுடிந்தது. 2016முடிவடைவதற்குள் தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுத்தருவேன் என்கிறார் சம்பந்தன். பொறுத்திருந்து பார்ப்பதா? அல்லது மீண்டும் ஆயுதங்களைக் கையிலேந்துவதா? இதனையும் கடந்து தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தினை ரணிலோ. மைத்திரியோ பெற்றுத்தர முயற்சித்தால் தென்னிலங்கை இனவாத சக்திகளால் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்பதுவே உண்மை.

**80** இவ்வாறு நெருப்பாகி நின்று நிமிர்ந்து சிரித்தவர்கள் இன்று விடியலுக்காகச் சிவப்பாகிப்போனார்கள். தரையிலே பெண் கரும்புலிகளின் புதிய அத்தியாயத்தின் திறவுகோல்களாகி வரலாற்றின் பக்கங்களில் தம்மையும் பொறித்துக்கொண்டார்கள்.

"இலக்கை அடையவேண்டும் என்பதற்காக எதையும் செய்யும் பக்குவம் இவர்களுக்கு இருந்தது. கடினமான பயிற்சிகளை இலகுவாகச் செய்யக்கூடியவர்களாகவும், எந்த வேளை

"இதென்ன வேறை ஏதோ பெரிசாயும் வருகுது. அண்ண பெரும்பாலும் கண்டோஸ்தானே தாறவர். இதில் ஏதோ விசயமிருக்கு"

"வரண்ட. நன்னீர் இல்லாத பகுதிகளில் சண்டை நடக்கப்போறதால. அங்க தாக்குப்பிடித்து நின்று சண்டை செய்யிறதுக்கு முன்னேற்பாட்டோட சோடா அனுப்பியிருக்கிறார்." என்றார் எங்களில் ஒருவர்.

எங்கோ பொறி தட்டியது. முகாமைத்துவம் தொடர்பான ஒரு புத்தகத்தில் ஒரு

போயிற்று. உடனே அவ்விடத்துக்கு மாலதியுடன் ஓர் அணி அனுப்பப்பட்டது. எதிர்ப்புப் பலமாகத்தான் இருந்தது. கூட நின்ற RPG போராளியை நகர்த்தி அவ்விடத்துக்கு அடித்ததும், கனரக ஆயுதத்தின் மூலம் காப்புச்சூட்டை வழங்கிக்கொண்டே அணி முன்னேறியது. வேகமாக நகர்ந்து காப்பரணுக்கு குண்டடித்ததும்தான், அதிலிருந்து சூடு நின்றது. தொடர்ந்து மிகுதிப் போராளிகளை காவலரண்களைக் கைப்பற்றும் பணிக்கு விட்டுவிட்டு. மாலதி தனது பழைய இடத்துக்குத் திரும்பினார். தொடர்ந்து ஏனைய முன்னரங்க

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி

யும் எத்தகைய கடின பணியையும் நிறைவேற்றும் ஆற்றல் மிக்கவர்களாகவும் விளங்கினர்" என்று கேணல் கடாபி குறிப்பிட்டார்.



தமது இலட்சியத்தை நோக்கி உறுதியாக நடந்த இவ்வீராங்கனைகளின் எண்ணங்களைச் சுமந்தபடி நடக்கின்றன பல பாதங்கள். குறுகிய காலப் பயிற்சியுடன் மீண்டும் அரியாலையைநோக்கி அணிகள் பயணித்தன. அணிகளின் கொம்பனி மேலாளராக ஜமுனா, கொம்பனிப் பொறுப்பாளராக மேஜர் செல்வி, பதில் பொறுப்பாளராக மேஜர் மாலதி ஆகியோர் போயிருந்தனர். ஏற்கனவே எம்மால் கைப்பற்றப்பட்டிருந்த பகுதிக்கு முன்னே பூம்புகார் வீதியைக் குறுக்கறுத்துக் கடற்கரையையும், நாவற்குழியையும்நோக்கி நீள்கின்ற படைத்தரப்பின் முன்னரங்க நிலைகளை உடைத்து, உள்நுழைந்து கைப்பற்றும் திட்டத்துக்கு எங்களுடைய படையணியும். லெப்.கேணல் இராஜசிங்கத்தின் தலைமையிலான லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. அத்துடன் கொமாண்டோ RPG அணி. பதுங்கிச் சுடும் அணி எனவும் சில தயாராகின. இத்தாக்குதலின் ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதியாக கேணல் சொர்ணமும். மாலதி படையணிக்கு கேணல் விதுஷாவும் நியமிக்கப்பட்டனர்.

முதல்நாள் இரவு கிழக்கரியாலையில் தரையிறங்கிய அணிகள் தமது பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அங்கேயே தரித்து நின்றன. தடையுடைப்பதுடன் இடதுபக்க நிலைகளைக் கைப்பற்றும் பணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கும். வலதுபக்க நிலைகளைக் கைப்பற்றும் பணி மாலதியின் அணிக்கும், செம்மணிச்சந்தி உட்பட யாழ் நெடுஞ்சாலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணி செல்வியின் அணிக்கும் வழங்கப்பட்டிருந்ததால், அணிகள் தத்தம் பணிக்கேற்ப பொருட்களைத் தயார்ப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

2000.05.08அன்று மதியம் இரண்டு மணியளவில் தாக்குதலின் ஆரம்ப இடத்துக்கு எல்லோரும் நகரத் தொடங்கினோம். வைகாசி மாத வெயில் சூழலையே வாட்டியிருந்தது. சூடான மணற்பாதை கால்களைப் பதம் பார்த்துக்கொண்டிருந்தது. நீண்ட தூர நடை. உடல் முழுவதிலும் வியர்வை வழிந்தது. அணிந்திருந்த பாதணி கூட சுடத்தொடங்கியது. எனினும் யாரும் பின்தங்கிவிடாதபடி வேகமாக நடந்தும். ஓடியும் சென்று இறுதி நகர்விடத்தில் நின்றோம். அங்கே இறுதித்திட்டம் கேணல் சொர்ணம் அவர்களால் விளங்கப்படுத்தப்பட்டது. இறுதியாகத் தலைவர் அனுப்பிவிட்ட கண்டோசுடன் பொறுப்பாளர்கள் வந்துகொண்டிருந்தனர்.

தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்று சில விடயங்கள் எழுதப்பட்டிருந்தன. தனக்குக் கீழ் உள்ளவர்களின் நலனில் அக்கறையும், தூரநோக்கான பார்வையும், இன்னும் இன்னும் நிறைய விடயங்களும் இருந்தன. அந்தத் தலைமைத்துவப் பண்பை எங்களின் தலைவரில் எந்நேரமும் காணலாம்.

இந்தச் சண்டைக்கான பயிற்சி நடந்துகொண்டிருந்த நேரமும் பொறுப்பாளர்களோடு கதைக்கும் போது "போராளிகளை நிறையத் தண்ணீர் குடிக்கச்சொல்வதோடு உரிய நேரங்களுக்கு கட்டாயம் தேநீர் கொடுத்திருக்கவேண்டும். ஒவ்வொரு அணித்தலைவர்களும் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்." என திரும்பத்திரும்ப வலியுறுத்தியிருந்தார். ஏனெனில் சண்டையிடப்போவது உவர் நிலத்தில். அங்கு வேகமாக நீரிழப்பு ஏற்படும். அதைத் தாங்கக்கூடிய தன்மையை முதலேயே ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்ற அவரின் தொலைதூரப்பார்வை மிகவும் வித்தியாசமானது. வியக்கத்தக்கது.

மெல்ல மெல்ல நகர்ந்து தடையருகே, தாக்குதல் நேரத்துக்காய் காத்திருந்தோம். நேரம் சரியாக 1.30. தடை தகர்ந்தது. அந்த இரவுப் பொழுதில் மாலதியின் அணி வலதுபக்கமாகக் காப்பரண்களைக் கைப்பற்றத் தொடங்கியது. அதேவேளை செல்வியின் அணி. உடைக்கப்பட்ட பாதையால் உள்நுழைந்து கிட்டத்தட்ட 1கி.மீ. தூரம் வேகமாக ஓடியது. நெடுஞ்சாலையில் குறிப்பிட்ட பகுதியினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே அவர்களது பணி. செம்மணிச்சந்தியில் கால்வைத்த அவ்வணி நெடுஞ்சாலையைத் தடுத்து நின்றது.

இடதுபக்கம் படையினரின் முன்னரங்க நிலை ஓரிடத்தில் வளைவாக இருந்ததால் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி மிகக்கடுமையான தாக்குதலைச் செய்துகொண்டிருந்தது இராணுவம். அப்பகுதியைக் கைப்பற்றிச் சென்ற ஆண் போராளிகள் காயம். வீரச்சாவு என அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுக்கொண்டிருந்ததால் அவர்களால் தொடர்ந்து நகரமுடியாமல்

நிலைகள் எமது கைகளில் விழத்தொடங்கின.

செம்மணிச் சந்தியில் ஏறிய செல்வியின் அணி வலப்புறம் திரும்பி நாவற்குழிப் பாலத்தைநோக்கி நகரத் தொடங்கியது. யாழ் நெடுஞ்சாலையின் நீளத்துக்கு இருமருங்கும் காப்பரண்களை அமைத்து. அப்பாலத்துக்குப் பாதுகாப்பை வழங்கிக்கொண்டிருந்தது இராணுவம். காப்பரண்களைத் தவிர வேறு காப்புகள் ஏதுமற்ற அப்பகுதியை வேகமாகக் கைப்பற்றிச் செல்வதென்பது இயலாத விடயம். இதனால் அணிகளைப் படையினரின் சூடுகளுக்கேற்பவே நகர்த்தவேண்டியிருந்தது. காப்பரண்களைக் கைப்பற்றி முன்னே சென்றுகொண்டிருந்த மேஜர் நிதியின் செக்சன் நின்ற இடத்திலிருந்து மூன்று, நான்கு காப்பரன்களுக்கு அப்பால் படையினர் நின்று சூட்டை வழங்கிக்கொண்டிருந்தனர். அந்தச் சூட்டை வைத்தே இராணுவத்துக்கும் நிதியின் அணிக்கும் இடையிலான தூரம் 50 மீற்றருக்கும் சற்றுக் கூடுதலாக இருக்கும் என்பதை ஊகிக்கமுடிந்தது. கடும் இருட்டிலே எறிகணை வெளிச்சங்களும். ரவைகளின் ஒளிர்வுமே ஒவ்வொரு பொருட்களையும் இனம் காட்டியது. அத்தோடு படையினரின் ஆயுதங்களின் சூட்டுச்சத்தம், ஒளிர்வு என்பவற்றை வைத்தே அதற்கெதிராக எமது சுடுகலன்கள் இயக்கப்பட்டன.

நின்ற இடத்திலிருந்து முன்னேறுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள, படையினரோ தமது பகுதியைத் தக்கவைப்பதில் முனைப்பாக இருந்தனர். இதனால் எதிர்த்தரப்பு தமது சூட்டு வலுவை அதிகமாக்கியது. நேரம் கிட்டத்தட்ட விடிகாலை மூன்றைத் தாண்டிக்கொண்டிருந்ததால், தொடர்ந்து முன்னேறும் முயற்சி எம்மால் கைவிடப்பட்டது. கைப்பற்றப்பட்ட காவலரண்களில் தரித்து நின்றவாறு அதனைச் சீர்ப்படுத்தி பாதுகாப்புக்குகந்ததாக மாற்றியமைக்கவேண்டியிருந்தது. பொழுது விடிந்ததால் அந்த வெளியில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது.

தொடர்வான்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 511. | லெப்.கபிலா | நாகஜோதி கந்தசாமி | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 512. | லெப்.தயானி | நிராகினி சிதம்பரநாதன் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 513. | லெப்.இன்பம் | நந்தினி பரஞ்சோதி | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 514. | லெப்.சுபாகரி | ரஞ்சினி பெருமாள் | மன்னார் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 515. | லெப்.கோதை | நந்தினி தளையசிங்கம் | கிளிநொச்சி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 516. | லெப்.அ[illegible] | [illegible]பிள்ளை | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 517. | லெப்.வை[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் இருட்டடிப்புச் செய்கிறது



புதிய அரசாங்கத்தின் 100நாள் வேலைத்திட்டங்கள் முழுதாக நிறைவேற்றப்படாதபோதிலும் ஆட்சிபீடத்தினைக் கைப்பற்றுவதற்காக போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு இவ்வரசாங்கம் வழங்கியிருந்தது. மீண்டும் வருமான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தனது இருப்பை எவ்வாறு தக்கவைத்துக்கொள்ளமுடியும் என்பதற்கமைய தமது அரசியல் முன்னெடுப்புக்களை நகர்த்திச் செல்கின்றதே தவிர. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் முனைப்புடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, வடமாகாண சபைகளினால் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கூட இன்னமும் நிறைவேற்றப்பட முடியாதவைகளாகவே காணப்படுகின்றன. ரணில் அவர்கள் ஆட்சியில் அமர முடியாத நிலையில் இருந்தபோது யுத்தம் ஒருபுறமிருக்க, மறுபுறத்தே அபிவிருத்திகள் இடம்பெற்றன. ஆனால் இன்று அபிவிருத்திகள் நிறுத்தப்பட்டு. சலுகைகள் குறைக்கப்பட்டு மீண்டும் இலங்கையில் ஒரு யுத்தத்தை உருவாக்கும் நோக்குடன் இவ்வரசாங்கம் செயற்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளாக, குறிப்பாக வடகிழக்கிலிருந்து இராணுவ வெளியேற்றம், சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டியதன் தேவை, மீள்குடியேற்றம், காணாமற்போனோரைக் கண்டறியும் விடயங்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் பராமரிப்பு தொடர்பான விடயங்கள், குள கட்டுமானப் பணிகள், வீதி அபிவிருத்திப்பணிகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கான வாழ்வாதார உதவிகள். அதிகாரப்பரவலாக்கல். இனப்படுகொலைக்கானத் தீர்வுத்திட்டம் போன்ற மிக முக்கியமான விடயங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகள் எட்டப்படாதவிடத்து தீர்வுத்திட்டம் தொடர்பாகப் பேசுகின்றோம். கலந்தாலோசிக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் இதற்கான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும் என்றவாறான பசப்புவார்த்தைகளைப் கூறி அரசாங்கம் ஏமாற்றிவரும் அதேநேரம் இதற்கிடையில் குளிர்காயும் முஸ்லீம் தரப்பு தமக்கான தனி அலகு என மறுபுறத்தில் அதற்கான முன்னெடுப்புக்கள். இதனை அரசாங்கம் கண்டும்காணாமல் செயற்படுவது போன்ற விடயங்களும் அரங்கேறி வருகின்றது.

குறிப்பாக யுத்தம் நிறைவடைந்து 06ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் தமிழ் அரசியல்கைதிகளது விடுதலை இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் அரசுடன் த.தே.கூட்டமைப்பு பேச்சுக்களை நடாத்தியும் பயனளிக்காது கைவிடப்பட்ட நிலைமை உருவாகியுள்ளது. அரசாங்கத்துடன் ஒரு தீர்வுத்திட்டத்தை த.தே.கூட்டமைப்பு முன்னெடுக்க வேண்டுமாகவிருந்தால் அதற்கு முன் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஏதாவது ஒன்று முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? என்று ஆராய்ந்து பார்த்து அதனை சீர்செய்யவேண்டும். தீர்வுத்திட்டத்திற்குப்பின்னர் இவையனைத்தும் நிறைவேறும் என நாம் கனவிலும் நினைக்க முடியாது. தமிழ் மக்கள் முன்வைக்கும் தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட வரலாறு இல்லை. வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பது த.தே.கூட்டமைப்பின் தாரக மந்திரம். ஏற்கனவே இணைந்திருந்த வடகிழக்கு மஹிந்தவின் காலத்தில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு பிரிக்கப்பட்டது. இதற்கு விமல் வீரவன்ச அவர்கள் உறுதுணையாகச் செயற்பட்டார்.

இப்போதும் கூட நாட்டின் எதிர்க்கட்சியாக த.தே.கூட்டமைப்பு இருப்பதை சிங்கள இனவாதக்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சி ஆசனத்திலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இதற்கிடையில் தற்போதைய அரசாங்கம் கூட்டரசாங்கம் என்பதால் எச்சந்தர்ப்பத்திலும் முரண்பாட்டைத் தோற்றுவிக்கலாம். இம்முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஐ.தே.க. ஐ.ம.சு. கூட்டமைப்பு தாம் தனியே காலூன்றி நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாடுகள் இக்காலத்தில் அரசிற்கு உதவிகளை வழங்குவதாகவிருந்தால் தமிழ் மக்களின் சுதந்திர நடமாட்டத்தையும், அவர்களுக்கான சிறப்புரிமைகளையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். எப்பகுதியிலும் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் வந்துசெல்வதற்கு ஏற்ற நிலைமைகள் இந்நாட்டில் காணப்பட்டால்தான் வெளிநாடுகள் தமது உதவிகளை இலங்கைக்குச் செய்யும். இதற்கிடையில் தமிழ் மக்கள் மீது இரசாயன குண்டுத்தாக்குதல், யுத்தக்குற்றங்கள் இடம்பெற்றமை தொடர்பிலான விசாரனைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்விசாரனைகளும் 2.3 வருடங்களைக் கடந்துவிட்டன. கொபி அனான், யசூசி அகாசி, நவநீதம்பிள்ளை, எரிக்சொல்ஹெய்ம், ஒபே பிளேக், ஹூசைன் போன்றவர்களும் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பிலும் அதனது மனித உரிமைச் செயற்பாடுகள் தொடர்பில் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் சர்வதேச நாடுகளைத் தொடர்புகொண்டு இப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் செயற்பட்டவர்கள். ஆனால் இவர்களின் அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

விடுதலைப்புலிகளது பிரச்சினைகளை பூதாகரமாக்கி அதனை பயங்கரவாதப் போராட்டம் எனச் சித்தரித்தவர்களும் இதில் அடங்குகின்றனர். ஒருபக்கத்தில் ஆயுத, தொழில்நுட்ப உதவிகளை வழங்கிய நோர்வே இறுதிக்கட்ட யுத்தத்தின்போது மௌனித்திருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் விடுதலைப்புலிகளின் கட்டுமானங்களை உடைத்தெறியும் நோக்கில் செயற்பட்டது. அக்கால கட்டத்தின்போது அதிகளவு ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஒரேயொரு தலைவர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே ஆவார். இவ்வாறெல்லாம் நடந்தேறிய பின்னர் சர்வதேச நாடுகள் இணைந்து யுத்தத்தை முன்னெடுத்தன. பிரபாகரனது தலைமை[illegible] சர்வதேசங்கள் [illegible] நடவடிக்கைகளை மேற்கொண்டன.

யுத்த முடிவின் பின்னர் இலங்கையிலிருந்து விடுதலைப்போராட்டம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது என மஹிந்தவின் அசராங்கம் அறிவித்திருந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் 11000பேர் கடந்த அரசினால் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கிடையில் அவசரகாலதடைச்சட்டத்தினை நீக்கியபோதும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் அமுலில் இருக்கிறது. இப்பயங்கரவாத தடைச்சட்டத்தினை மைத்திரியின் கூட்டரசுநீக்கும்என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர்கள் இதுவரையில் நீக்கவில்லை. இவ்வரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்பட்டது. அதாவது முப்படை அதிகாரம்.

தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் என வருகின்றபோது மிகமுக்கியமாக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் முன்னிற்கப்போகிறது. ஐரோப்பிய ஆசிய நாடுகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பல அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. இவ்வமைப்பை நிர்வகிப்பவர்கள் என 450இற்கும்மேற்பட்டோர் இலங்கை அரசினால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் இலங்கைக்குள் வருவதையும்தடைசெய்தது. இவர்களுடையபெயர் பட்டியல் அனைத்தும்பாராளுமன்றத்தில் கூட ஆவணமாகப் பதியப்பட்டுள்ளது. இத்தடைநீக்கப்படவேண்டுமாகவிருந்தால் மீண்டும் பாராளுமன்றத்தில் பிரேரனையாக கொண்டுவரப்படவேண்டும். தீர்வுத்திட்டங்கள் தொடர்பில் இரா.சம்பந்தனது நிலைப்பாடு, தான் எதிர்க்கட்சியாகவிருக்கின்ற காலகட்டத்திலேயே தமிழ் மக்களுக்கானத் தீர்வுகள் எட்டப்படவேண்டும் என்பதில் முனைப்பாகவிருந்தாலும் கூட, இவரது செயற்பாடுகள் இவ்வரசாங்கத்தினை ஒத்துப்போவதாகவே அவதானிக்க முடிகின்றது. எதிர்க்கட்சி என்ற செயற்பாடுகள் இல்லை என்றே கூறவேண்டும். எதிர்க்கட்சி என்பது ஆளுங்கட்சியாக வரக்கூடியவொன்று. அப்படியாயின் அது தமக்கிடையே பல அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வெதிர்க்கட்சியானது தமது கட்சியினை பலப்படுத்துவதற்காக அங்கத்துவக் கட்சிகளை இணைத்துக்கொள்வதும் சிறந்த உத்தியாகும். இதற்கிடையில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் என்பது ஒரு இறுக்கமான காலகட்டத்தினை எட்டிப்பிடித்திருக்கிறது. அரசாங்கம் தமிழ் மக்களுக்கான உதவிகளை வழங்கினால் மாத்திரமே சர்வதேச நாடுகள் தலையிட்டு உதவிகளையும் வழங்க முன்வருவார்கள்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சீனாவிடம் மஹிந்த ராஜபக்ஷ உறவு கொண்டாடியதைப்போல் இந்த கூட்டரசாங்கமும் சீனாவிடம் மீண்டும் கையேந்தியுள்ளது. நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்திகள் அனைத்தும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியா, சீனா, அமெரிக்கா இந்த மூன்று நாடுகளின் தலையீடுகளும் இலங்கையில் தொடர்ந்து காணப்படுகின்றது. இவர்களுடைய தலையீடுகள் அற்றுப்போகும் நிலையில் மீண்டும் ஒரு யுத்தத்திற்கான வழிவகைகள் தோற்றுவிக்கப்படும். இவர்களையும் சமாளித்துச்செல்லவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது. த.தே.கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான [illegible] முன்வைப்பதற்கு [illegible] தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்துள்ளது. இத்தீர்வுத்திட்டமானது ஆரோக்கியமாகவிருந்தாலும் இதனை த.தே.கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதற்கு நாரதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்படுகின்றமையே காரணமாகும். த.தே.கூட்டமைப்பினால் உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்டு மக்களின் செல் வாக்கினைப்பெற்றவர்தான் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள். ஏற்கனவே இனப்படுகொலை என்கின்ற தீர்மானம் வடமாகாணசபையினால் நிறைவேற்றப்பட்டு நிலுவையில் இருக்கிறது. மிக முக்கியமாக வடகிழக்கு இணைப்பு என்பது இத்தீர்வுத்திட்டத்திற்கு அவசியமானதொன்று. இது நிறைவேற்றப்படுமாகவிருந்தால் அடுத்தடுத்த விடயங்களை நாம் இலகுவில் மேற்கொண்டுசெல்லலாம். இதற்கு முட்டுக்கட்டையாக முஸ்லிம் அரசியல்வாதிகளை வைத்து வடகிழக்கு இணைப்பினை பிரித்தாளும் செயற்பாட்டினை தற்போதைய அரசு மேற்கொள்கிறது.

வடகிழக்குஇணைக்கப்படுவதில் எதிர்க்கட்சியாகிய த.தே.கூட்டமைப்பு தோல்வியினைக் காணுமாகவிருந்தால் மற்றைய ஏனைய விடயங்களிலும் தோல்வி காணவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதிகாரப்பரவலாக்கல் என்பனவும் படிப்படியாக நிறைவேற்றப்பட்டால் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தின் மிகமுக்கியமான விடயங்கள் பூர்த்தி செய்யப்படும். ஆனால் தற்போது த.தே.கூட்டமைப்பு தீர்வுத்திட்டத்தில் அபிவிருத்தி என்ற ஒன்றை மட்டும் உட்கொண்டுசெல்வதை அவதானிக்கமுடிகிறது. தற்போதைய த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசியப் பிரச்சினை என்கின்ற விடயத்தினை புதைத்துவிட்டு தமது ஆசனங்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். ஒரு கட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காக தேசியம். சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுத்த த.தே.கூட்டமைப்பின் சிறிதரன் சரவணபவான், பொன்செல்வராசா, அரியநேந்திரன் போன்றோரின் குரல்கள் மௌனிக்கப்பட்டுள்ளது. ஏனையோர் சம்பந்தன் கூறும் விடயங்களுக்கு தலையாட்டுபவர்களே.

இவ்வாறிருந்தால் ஒரு தீர்வுத்திட்டத்தினை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை எட்டமுடியாது. தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுக்கவேண்டும். அத்தகைய செயற்பாடுகளை த.தே.கூட்டமைப்பு முன்னெடுக்குமாகவிருந்தால் தமிழ் மக்களின் தீர்வுத்திட்டம் வெற்றியின் பாதையில் செல்லும். இல்லாவிட்டால் இத்தீர்வுத்திட்டங்கள அரசினால் இழுத்தடிக்கப்படும் நிலை தொடரும். இதற்கிடையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தலும் நடைபெற்று புதிய ஆட்சி மலரும். பழைய பல்லவியையே மீண்டும் த.தே.கூட்டமைப்பினர் பாடுவர். இதற்கிடையில் எத்தனை அரசியல்வாதிகள் மரணித்துப் போவார்களோ தெரியாது. தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்கள் காத்திரமான முடிவுகளாக இருக்கவேண்டும். அதனை நோக்கியதாகவே தமிழ்த் தரப்பினரின் செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதையே இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

நெற்றிப்பொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போரியல் இழப்புகள் தொடர்பாக உண்மை கண்டறியப்படவேண்டும்

யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான முழுமையான கணக்கெடுப்பு ஒன்றை அரசாங்கம் நடத்தவேண்டும். மூன்று தசாப்தங்களாக நீண்ட விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகளாகிவிட்டன. 2009 மே 19ம் திகதி காலை நாடாளுமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் வெற்றியை அறிவித்திருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. இந்த மூன்று தசாப்தகாலப் போரினால் இலங்கைக்கு ஏற்பட்ட இழப்புகள் எவ்வளவு என்ற துல்லியமான கணக்கு ஏதும் இன்றுவரை இல்லை. நவீன வசதிகள் எல்லாம் இருந்தபோதிலும். இந்தப் போரினால் ஏற்பட்ட பாதிப்புகள். அழிவுகள் குறித்த புள்ளிவிபரங்கள் ஏதும் இல்லாதிருப்பது இது எந்தளவுக்கு கோரமானதாக இருந்துள்ளது என்பதற்கான சாட்சியாக எதிர்காலத்தில் விளங்கும்.

கிட்டத்தட்ட 26 ஆண்டு காலம் நீடித்த ஆயுதப்போரில் 200 பில்லியன் டொலர் பொருளாதார இழப்புகள் ஏற்பட்டதாக ஆசிய பொருளாதார நிறுவகம் 2011இல் வெளியிட்டிருந்த கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தது. இது போர் முடிவுக்கு வந்த ஆண்டான 2009ம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விடவும் ஐந்து மடங்கு அதிகமானது. போரினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் குறித்த ஒரு பருமட்டான தகவலாகவே இது இருந்தாலும். இந்தப் போரில் உயிர்களுக்கு ஏற்பட்ட அழிவுகள். சேதங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றும் சரியாக மேற்கொள்ளப்படவில்லை. "ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த உள்நாட்டுப்போர்" அல்லது "ஒரு இலட்சம் பேர் வரை கொல்லப்பட்ட போர்" என்று ஊடகங்களிலும் அறிக்கைகளிலும் அடைமொழிப்படுத்தப்பட்டாலும். இந்தப் போரில். கொல்லப்பட்ட பொதுமக்கள் எத்தனை பேர். காயமடைந்தவர்கள் எத்தனை பேர். காணாமற்போனவர்கள் எத்தனை பேர் என்ற முறையான தகவல் ஏதும் கிடையாது.

அதுபோலவே போரில் ஈடுபட்ட அரச படைகள் மற்றும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தெளிவான மதிப்பீடுகளோ அல்லது முரண்பாடுகள். சந்தேகங்கள் இல்லாத ஒரு புள்ளிவிபரமோ இதுவரை வெளியாகவில்லை. நான்கு கட்டங்களாக நீடித்த இலங்கை அரசபடைகளுக்கும். விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் மற்றும் சுமார் இரண்டரை ஆண்டுகள் வரை நீடித்த இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் ஆகியவற்றின் போது பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். காணாமற்போயினர். பொதுமக்களின் இந்த மரணங்களில் தற்செயலானவை. திட்டமிட்டவை. ஆத்திரத்தில் பழிவாங்கும் நோக்கம் கொண்டவை என்று எல்லாமே உள்ளடங்குகின்றன. ஒருவகையில் சொல்லப்போனால். இந்தப் போர். நீதிக்குப் புறம்பான கொலைகளின் களமாகவே இருந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

போர்களின் போது போர் தொடர்பான நீதியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று சர்வதேச சட்டவரையறைகள் இருந்தாலும். அவை ஒன்றும் நடைமுறைக்கு சாத்தியப்படுவதில்லை. சுவீடனின் உப்சலா பல்கலைக்கழகம் சார்பில் உப்சலா முரண்பாட்டு புள்ளிவிபர திட்டம் மேற்கொண்ட ஒரு ஆய்வின் முடிவில். வெளியிடப்பட்ட அறிக்கையின் படி. 1990 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் 59.193 இற்கும் 75.601 இற்கும் இடையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது இரண்டாம். மூன்றாம். நான்காம் கட்ட ஈழப்போர்களில் ஏற்பட்ட இழப்புகள் மட்டுமேயாகும். முதலாம் கட்ட ஈழப்போரிலோ. இந்தியப் படையினரின் காலத்திலோ பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் இதில் சேர்க்கப்படவில்லை. போரில் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பான முழுமையான கணக்கெடுப்பு ஒன்றை அரசாங்கம் நடத்தவேண்டும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அதனை அரசாங்கம் முழுமையாக மேற்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்படு நிலையில். இருந்தவரை. தமது பக்கத்தில் ஏற்பட்ட இழப்புகளின் விபரங்களை அவ்வப்போதும். ஆண்டுதோறும் மாவீரர் நாளின் போது விரிவான பட்டியலாகவும் வெளியிட்டு வந்தது.

இறுதியாக 2007 மாவீரர் நாளின் போது விடுதலைப்புலிகளால் ஆண்டுவாரியாக உயிரிழந்த புலிகளின் விபரங்கள் வெளியிடப்பட்டன. அதன்படி 1982ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்களின் அதிகாரபூர்வ எண்ணிக்கை 19.792 பேராகும். 2008இல் உயிரிழந்த புலிகள் 1186 பேரின் தகவல்கள் இணையங்களில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுடன் சேர்த்தால். 20.978இற்கும் அதிகமான புலிகள் 2008 காலப்பகுதி வரை உயிரிழந்துள்ளனர். 2007 ஒக்டோபருக்குப் பின்னர். புலிகளுக்கு கணிசமான ஆளணி இழப்புகள் ஏற்பட்டன. ஆனால். அதுபற்றிய விபரங்களை அவ்வப்போது அவர்கள் வெளியிட்டிருந்தாலும். முழுமையான பட்டியல் தரவுகளை வெளியிடவில்லை. போர் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்ததால் துல்லியமான தகவல்களைத் திரட்டுவதில் சிரமங்கள் இருந்திருக்கலாம். அல்லது அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டதை ஒப்புக்கொள்ளும்போது அது உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால். அதை வெளியிடாமல் தவிர்த்திருக்கலாம்.

எனினும் 2009 ஏப்ரல் மாத தொடக்கத்துக்குப் பின்னர். விடுதலைப் புலிகள் இயக்கம் கிட்டத்தட்ட முடக்க நிலையை அடையத் தொடங்கிவிட்டதால். அதற்குப் பின்னர் போரில் கொல்லப்பட்ட மூத்த தளபதிகளின் விபரங்களைக்கூட முறைப்படி அறிவிக்க முடியாத நிலையை அடைந்திருந்தது. இறுதிக்கட்டப்போரில். நூற்றுக்கணக்கான விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டபோதிலும் அதுவும் சரியான துல்லியமான புள்ளிவிபரங்கள் கிடையாது. அதே வேளை. அரசாங்கம் கூறுகின்ற தகவல்களின் படி பார்த்தால். அது மிகப்பெரியதாக - விடுதலைப்புலிகளின் ஆளணிப் பலத்தை விஞ்சிய தொகையாகவே இருந்தது. 26 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தின் போது அரச படைகள் வெளியிட்ட புலிகளின் உயிரிழப்பு பற்றிய தகவல்களுக்கும். விடுதலைப்புலிகள் வெளியிடும் அதிகாரபூர்வ தகவல்களுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடுகள் இருந்தன. விடுதலைப்புலிகள் 2008ம் ஆண்டு வரை தமது இழப்புகள் தொடர்பான தகவல்களில் வெளிப்படைத் தன்மையைக் கடைப்பிடித்தனர் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டுகளை முன்வைப்போர் எவருமே. போரில் கொல்லப்பட்ட போராளிகளின் தொகையை புலிகளின் தலைமை மறைத்து விட்டதாகவோ. குறைத்துக் கூறியதாகவோ ஒருபோதும் கூறியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே



வேளை. விடுதலைப் புலிகளின் இழப்புகள் தொடர்பாக படைத்தரப்பு எப்போதும் மிகைப்படுத்தியே தகவல்களை வெளியிட்டு வந்தது. அதனை போரின் போது கடைப்பிடிக்கப்பட்ட ஒரு உளவியல் நடவடிக்கையாகவும் குறிப்பிடலாம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின்படி. 2006 ஓகஸ்ட் மாதம் மாவிலாறில் நான்காவது கட்ட ஈழப்போர் தொடங்கியதில் இருந்து. 2009 மே 18 இல் போர் முடிவுக்கு வந்தது வரையான காலப்பகுதியில் 22.247 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும். இவர்களில் 11.812 பேரின் பெயர் விபரங்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் இராணுவத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டது என்பதே பொதுவான கருத்து. ஏனென்றால். 2006 - 2007 காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் சுமார் 2000 பேர் வரையே இழந்துள்ளதாக அவர்களின் அதிகாரபூர்வ கணக்குகள் காட்டுகின்றன. எஞ்சிய சுமார் ஒன்றரை ஆண்டுகளில் மோசமான போர் நடந்திருந்தாலும். சராசரியாக நாளொன்றுக்கு 35 பேர் வீதம் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும். இறுதிக்கட்டப்போர் பேரழிவுகள் மிக்கதாக இருந்ததால். விடுதலைப்புலிகள் தரப்பில் 1982 தொடக்கம் 2009 வரையான காலத்தில் குறைந்தது 25 ஆயிரம் பேராவது உயிரிழந்திருக்கலாம் என்பது பொதுவான கணிப்பாக உள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை ஒருபோதும் 30 ஆயிரத்தை தாண்டியிருக்கவாய்ப்பில்லை. விடுதலைப் புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டதால். அவர்கள் தரப்பிலான. போரின் இறுதிக்கட்டம் பற்றிய எல்லாத் தரவுகளும் அழிந்துபோய்விட்டன.

ஒரு போரில் தோற்கடிக்கப்படும் எந்தத் தரப்புமே. வரலாற்று ரீதியாக எதிர்கொள்ளும் பாரிய பின்னடைவு இது. அதனை விடுதலைப்புலிகளும் சந்தித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் தரப்பில் போரின் இறுதியில் உயிர் தப்பியவர்கள் யார். கொல்லப்பட்டவர்கள் யார். அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டனர் என்ற எந்த விபரமுமே கிடையாது. புலிகளின் பல முக்கியஸ்தர்கள். தளபதிகளுக்கு என்ன நேர்ந்தது என்ற விபரங்களும் இல்லை. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன். தளபதிகள் சூசை. ஜெயம். பானு உள்ளிட்ட பலர் இறுதிக்கட்டப்போரில் கொல்லப்பட்டதற்கான ஒளிப்பட ஆதாரங்களை அரசாங்கம் வெளியிட்டது.

அதற்கு முன்னரே தீபன். மணிவண்ணன். சொர்ணம். சசிகுமார். கடாபி. விதுசா. துர்க்கா போன்ற விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகள் போரில் கொல்லப்பட்டுவிட்டனர். ஆனாலும். புலிகளின் புலனாய்வுத் துறைப்பொறுப்பாளர் பொட்டம்மானின் சடலம் கடைசிவரை படையினரிடம் கிடைக்கவில்லை. எனினும் அவர் இறந்துவிட்டார் என்று உறுதியாக சொல்கிறது படைத்தரப்பு. அதே வேளை. இறுதிப்போரில் உயிர் தப்பி காடுகளில் இருந்த புலிகளின் தளபதிகளுக்கும். சரணடைந்தவர்களில் பலருக்கும் என்ன நிகழ்ந்தது என்ற மர்மமுடிச்சு இன்னமும் அவிழவேயில்லை. இந்த நீண்ட போரில் அரச படையினர் எவ்வளவு பேர் உயிரிழந்தனர் என்ற விபரம் கூட சரியாக இல்லை.

அரசாங்கம் போரில் வென்றுள்ள போதிலும். அதன் வசம் எல்லா ஆவணங்களும் அழியாமல் உள்ள போதிலும். துல்லியமான விபரங்களை வெளியிடத்தக்க நிலையில் இருந்த போதிலும். தெளிவான புள்ளிவிபரத்தை வெளியிடத் தவறியுள்ளது படைத்தரப்பு. போர் முடிவுக்கு வந்த பின்னர். அரசாங்கத் தரப்பில் படையினரின் மரணங்கள். காயங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட பல்வேறு புள்ளிவிபரங்கள் இங்கு ஆய்வுக்காக எடுக்கப்பட்டபோது. அவற்றுக்கிடையில் குழப்பங்கள். முரண்பாடுகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த முரண்பாடுகள் ஒரு விடயத்தை தெளிவுபடுத்துவதாக உள்ளது. அதாவது. இந்த நான்கு கட்ட ஈழப் போர்களிலும் அரசபடைகள் துல்லியமான தரவுகளைப்பேணும் வசதிகளைக்கொண்டிருந்தபோதிலும். அதைச் சரிவரச் செய்யவில்லை என்பதே உண்மை.

போரின் போது படைத்தரப்பு உண்மையான இழப்புகள் பற்றிய தரவுகளை மறைப்பதாக எப்போதும் விடுதலைப் புலிகளால் மட்டுமன்றி. ஊடக விமர்சகர்கள் மத்தியிலும் ஒரு குற்றச்சாட்டு இருந்து வந்தது. படைத்தரப்புக்கு பாரிய அழிவுகள் ஏற்பட்ட போதெல்லாம். செய்தித் தணிக்கை மற்றும் பிற வழிகளில் அரச படைகளின் இழப்புகள் பற்றிய தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படாமல் மறைக்கப்பட்டன. சாதாரணமான சண்டைகளில் ஏற்படும் இழப்புகள் கூட இவ்வாறு மறைக்கப்பட்டதான குற்றச்சாட்டுகள் இருந்தன. இது படையினர் மற்றும் தெற்கிலுள்ள அவர்களின் உளவியல் பலம் சிதைந்து போகாமல் இருப்பதற்கும். புலிகளைப் பலவீனப்படுத்துவதற்குமான ஒரு உளவியல் உத்தியாகவும் கையாளப்பட்டிருக்கலாம். ஏனென்றால் போர் ஒன்றில் 100% வெளிப்படைத்தன்மை ஒருபோதும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. இழப்புகள் பற்றிய உண்மைகளை மறைப்பது அல்லது தாமதமாக வெளியிடுவது வழக்கமான ஒரு உத்திதான்.

விடுதலைப்புலிகளும் கூட இழப்புகளின் விபரங்களை மறைத்ததான குற்றச்சாட்டு அவர்கள் மீது இல்லாவிட்டாலும். அதைத் தாமதமாக வெளியிடும் உத்தியைப் பலசமயங்களில் கையாண்டுள்ளனர். போர் ஒன்றில் உயிரிழப்புகள். காயங்கள் பற்றிய உணர்வுபூர்வமான விடயங்களில் ஒளிவு மறைவுகள் பேணப்படுவது என்பது வழக்கமே. அது இலங்கையில் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் நீடித்தபோரிலும். தாராளமாகவே கடைப்பிடிக்கப்பட்டது.

சுழியோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சியும், சமஸ்டியும் இனப் பிரச்சினைக்கானத் தீர்வுகள் அல்ல

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான 'தடல்புடல்' ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இதற்கு முன்னரும் 1972இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் முன்னணி அரசின் குடியரசு அரசியல் யாப்பு ஏற்பட்டபோதும். 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் நிறைவேற்று ஜனாதிபதி முறைகொண்ட அரசியல் யாப்பு ஏற்பட்டபோதும் இத்தகைய ஆரவாரங்கள் இருக்கத்தான் செய்தன.

1972.1978ஆம் ஆண்டுகளில் அரசியல் யாப்புகள் உருவாக்கப்பட்டபோது. அந்த அரசியல் யாப்புகள் இலங்கையின் புரையோடிப்போன இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நாட்டை சுபீட்சப் பாதையில் கொண்டு செல்லப்போவதாகத்தான் அதை வகுத்தவர்கள் கூறினர். ஆனால் நடைமுறையில் நடந்தது வேறு. 1972 அரசியல் யாப்பில் பல முற்போக்கான அம்சங்கள் இருந்தாலும். இனப் பிரச்சினையை அது கூர்மைப்படுத்தியது. 1978 அரசியல் யாப்பில் முன்னர் இருந்த அரைகுறை ஜனநாயக அம்சங்களும் இல்லாதொழிக்கப்பட்டதுடன். இனப் பிரச்சினையையும் யுத்தமாக மாற்றியது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தற்போது வரையப்படவுள்ள அரசியல் யாப்பு எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருக்கப்போகிறது. அது நடைமுறைக்கு வந்தால் என்னென்ன விளைவுகளை உருவாக்கும் என்ற கேள்விகள் எழுவது இயல்பானது. இலங்கையில் மற்றைய எல்லா முரண்பாடுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு. இனப் பிரச்சினைதான் முன்னுக்கு வந்து நிற்கிறது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. அதனால்தான் இடதுசாரிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பியினர் 1971இலும் 1988-89 காலகட்டத்திலும் முன்னெடுத்த 'வர்க்க ரீதியிலான' ஆயுதப் போராட்டம் குறுகிய காலத்தில் ஒடுக்கப்பட்டுவிட. தமிழீழம் என்ற தனிநாட்டுக்கான ஆயுதப்போராட்டம் நீண்டகாலம் நிலைத்து நின்றதுடன். தனியான ஆட்சிப் பிரதேசத்தையும் நீண்டகாலம் வைத்திருந்தது.

ஆனாலும். தனிநாட்டுத் தீர்வு , என்பது அரசியல் ரீதியாகவும். நடைமுறை ரீதியாகவும் தமிழ் மக்களுக்கு பொருத்தப்பாடு இல்லாத ஒன்று என்ற படியால். அந்தப் போராட்டமும் இறுதியில் தோல்வியில் முடிவடைந்தது. ஆனால் தனிநாட்டுத் தீர்வு தமிழ் மக்களுக்குப் பொருத்தப்பாடு இல்லாவிட்டாலும். அவர்களுக்கு தேசிய இனப் பிரச்சினை ஒன்று உள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அதனால்தான். புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் நேரங்களிலெல்லாம். அதில் இனப் பிரச்சினைக்கான தீர்வும் உள்ளடக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படுவது ஒரு வழமையாக இருந்து வருகிறது.

தற்போது இன்னொரு புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட இருக்கிறது என்றதும் தமிழ் மக்களுக்கு மீண்டும் அப்படியான ஒரு எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இதுவரை காலமும். இன்றும் நிலவும் யதார்த்தம்தான் என்ன? தென்னிலங்கையைப் பொறுத்தவரை. ஐக்கிய தேசியக்கட்சி. சிறீலங்கா சுதந்திரக்கட்சி. ஜே.வி.பி. போன்ற பிரதான கட்சிகள் உட்பட. இடதுசாரிக் கட்சிகளைத்தவிர ஏனைய அத்தனை கட்சிகளும் இலங்கை இறுக்கமான ஒற்றையாட்சி கொண்ட ஒரு நாடாக இருக்கவேண்டும் என்ற ஒரே நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றன.

இன்று ஆட்சியில் இருக்கும் மைத்திரி - ரணில் அரசு தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும் என்று சொன்னாலும் கூட. அந்தத் தீர்வு ஒற்றையாட்சிக்குள் உட்பட்டதாகவே இருக்கும் என்பதையும் வலியுறுத்துகிறார்கள். மறுபக்கத்தில். தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில் மூத்த தமிழ் கட்சியான தமிழ் காங்கிரஸ் ஐம்பதுக்கு ஐம்பதையும். பின்னர் தமிழரசுக்கட்சி சமஸ்டிக் கொள்கையையும். பின்னர் இரு கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக்கூட்டணி தனிநாட்டுக் கொள்கையையும் முன்வைத்தார்கள்.

ஆனால் தனிநாட்டுக்கான ஆயுதப்போராட்டம் ஒன்று 30 வருடகாலம் நடந்து தோல்வியிலும் பாரிய அழிவிலும் முடிந்த பின்னர். இன்று ஏறக்குறைய அனைத்துத் தமிழர் தரப்புகளும் மீண்டும் சமஸ்டி என்ற கொள்கைக்கு வந்திருக்கின்றன. அதாவது இன்றைய யதார்த்தம் என்னவென்று பார்த்தால். சிங்களப் தரப்பு ஒற்றையாட்சியை வலியுறுத்தும் நிலையும். தமிழர் தரப்பு சமஸ்டி கொள்கையை வலியுறுத்தும் நிலையுமே காணப்படுகிறது. அதாவது இருதரப்பினரும் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இனப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டபோது என்ன நிலைப்பாட்டில் இருந்தனரோ. அதே நிலைப்பாட்டில்தான் இன்றும் இருக்கின்றனர். இந்த எதிரும் புதிருமான நிலை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு ஒருபோதும் உதவாது.

முதலில் அரச தரப்பை அல்லது சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் முழுத் தரப்பையும் எடுத்துக்கொண்டால், அவர்கள் ஒற்றையாட்சியைத் தொடர்ந்து கட்டிப்பிடித்துக்கொண்டு இருப்பது தவறானது. அப்படி அவர்கள் இருப்பது மனித நீதிக்கு அப்பாற்பட்டது என்பது மாத்திரமல்ல. மீண்டும் இலங்கையில் இனப் பிரச்சினையை உக்கிரப்படுத்தவே உதவும். அதுவும் இலங்கை இனப் பிரச்சினையில் சர்வதேச சக்திகள் என்றழைக்கப்படும் வல்லாதிக்க சக்திகளின் ஆதிக்கம் நேரடியாக ஏற்பட்டு. இலங்கையில் அவர்களுக்குச் சாதகமான ஆட்சி மாற்றம் ஒன்றும் ஏற்பட்ட பின்னர். சிங்களத்தரப்பினர் தொடர்ந்தும் பேரினவாதக் கொள்கையில் விடாப்பிடியாக நின்றால். அது இலங்கையில் பங்களாதேஷ். சைப்பிரஸ். கிழக்கு திமோர். எரித்திரியா. சூடான் போன்ற பிரச்சினைகளில் இந்த வல்லாதிக்க சக்திகள் தலையிட்டு தமக்குச் சார்பாகத் தீர்வு கண்டது போன்ற நிலையைத்தான் உருவாக்கும். மறுபக்கத்தில். தமிழர் தரப்பு காலத்துக்காலம் பல தீர்வுகளை முன்வைத்து இன்று மீண்டும் சமஸ்டிக் கொள்கையை வந்தடைந்திருப்பது. அவர்கள் இலங்கையில் நிலவும் யதார்த்த சூழலில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை எவ்வாறு தீர்வு காண்பது என்பதில் தெளிவில்லாதவர்களாக அல்லது தமது சுய அரசியல் இலாபத்துக்காக பிரச்சினையைத் தீர்க்க [illegible] இருந்துள்ளார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

அதேநேரத்தில் இன்று அவர்கள் முன்வைக்கும் சமஸ்டித் தீர்வு கூட. இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சரியான வழிமுறை அல்ல.

தமிழரசுக்கட்சி 1949இல் உருவாக்கப்பட்டபோதுதான் சமஸ்டிக் கொள்கை முதன்முதலாக முன்வைக்கப்பட்டது. அதுவும் அக்கட்சி தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குப்பெறுவதற்காக தமிழில் 'தமிழரசுக் கட்சி' (அதாவது தமிழர்களுக்கு தனியான அரசு வேண்டும் கட்சி என்ற அர்த்தப்பட) என்றும். சிங்கள மக்களையும் உலகையும் ஏமாற்ற ஆங்கிலத்தில் Federal Party (சமஸ்டி கட்சி) என்றும்தான் பெயர் சூடியது.

அவர்கள் சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்த காலத்தில் இல்லாவிட்டாலும். 1956 தேர்தலில் அவர்கள் தமிழ் காங்கிரசைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று. தமிழ் பேசும் மக்களின் பிரதான அரசியல் கட்சி ஆன பின்னர். வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி முஸ்லீம் மக்கள். மலையக மக்கள் மத்தியிலும் தமிழரசுக் கட்சிக்கு செல்வாக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக வடக்கு மற்றும் மலையகத் தமிழர்கள். முஸ்லீம்கள் உட்பட "35 இலட்சம் தமிழ் பேசும் மக்களின் தலைவர்" என தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அழைக்கப்பட்டார். ஆனால். தமிழரசுக் கட்சியின் இனவாதக் கொள்கை காரணமாக காலப்போக்கில் முஸ்லீம் மக்களும். மலையகத் தமிழ் மக்களும் தத்தமது யதார்த்தச் சூழலுக்கு ஏற்ப தமக்கான அரசியல் தலைமையை உருவாக்கிக் கொண்டு. பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் இணக்க அரசியலுக்குச் சென்றுவிட்டனர். அதுமாத்திரமல்லாது. கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மையவாதத் தலைமையிலிருந்து விடுபட ஆரம்பித்துவிட்டனர்.

இன்னொரு பக்கத்தில் அன்று கிழக்கிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த ஒரு சூழலில். வடக்கையும். கிழக்கையும் சேர்த்து தமிழரசுக்கட்சி சமஸ்டி அமைப்புக் கோரியதற்கு அவர்கள் அளவிலாவது ஒரு நியாயப்பாடு இருந்தது. ஆனால் அவர்களது நடைமுறைச்சாத்தியமற்றதும். புத்திசாலித்தனமற்றதுமான கொள்கைகளால் கிழக்கின் இன விகிதாசாரம் பெருமளவு மாறிவிட்டது. இன்று கிழக்கில் முஸ்லீம்களும். சிங்களவர்களும் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கினராகவும். தமிழர்கள் மூன்றில் ஒரு பங்கினராகவும் வாழும் சூழல்தான் நிலவுகின்றது. அதுமட்டுமல்லாமல். வடக்கு கிழக்கில் வாழுகின்ற முஸ்லீம் மக்கள் தமக்கென தனியான முஸ்லீம் நிர்வாக அலகொன்றைக் கோருகின்ற நிலைமையும் உருவாகிவிட்டது. இந்தச் சூழலில். வடக்கையும் கிழக்கையும் சேர்த்து இலங்கைத் தமிழர்களுக்கென்று சமஸ்டி அமைப்பைக்கோருவது நடைமுறைச் சாத்தியமற்றது. பொருத்தமில்லாதது. மேலும் புதிய பிரச்சினைகளை உருவாக்கக்கூடியது.

எனவே தமிழ் தலைமைகள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போல "சமஸ்டி..சமஸ்டி" என்று மீண்டும் மீண்டும் சொல்வதால். எந்தவிதமான ஆக்கபூர்வமான நன்மையும் நிகழப்போவதில்லை. அதுமாத்திரமன்றி. சிங்கள இனவாத சக்திகள் மட்டுமன்றி. 'நல்லாட்சி' என்று கூறிக்கொண்டு. மக்களின் ஜனநாயக உரிமைகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பறித்துவரும் இன்றைய அரசின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது நிலைப்பாடு ஒற்றையாட்சிதான் என்பதை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வலியுறுத்திச் சொல்லிவிட்டார்கள். எனவே. புதிய அரசியல் அமைப்பு மூலம் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு வரப்போகிறது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்துகின்ற மாலை போலித்தனமானது.

உண்மையில் தமிழ் தலைமைகள் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண விரும்பினால். நடைமுறைச்சாத்தியமற்ற சமஸ்டிக் கொள்கையில் தொங்கிக் கொண்டிருக்காமல். யதார்த்த நிலைமைக்கு ஏற்பச் செயற்படவேண்டும். அப்படிச் செய்வதானால் அவர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் உள்ளன.

ஒன்று. 2000ஆம் ஆண்டில் அப்போதைய சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வு யோசனைகளில் உள்ளடங்கியிருந்த வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பிரதேசங்களை ஒன்றிணைத்து அமைப்பதற்கு உத்தேசித்திருந்த 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்ற திட்டத்தை அமுலாக்கக்கோருவது. சந்திரிக்கா இன்றைய அரசை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்ததால். அவர் மூலமே இந்த நகர்வைச்செய்ய முடியும். அந்த முயற்சிக்கு இடதுசாரிக் கட்சிகளினதும். ஐ.தே.க. சிறீ.ல.சு.கட்சிகளில் உள்ள ஜனநாயக சக்திகளினதும் ஆதரவையும் பெற முடியும். (முஸ்லீம் மக்களின் தனி அலகுக் கோரிக்கையையும் சாதகமாகப் பரிசீலிப்பது அவசியமானது)

இரண்டாவது. தற்போதுள்ள மாகாணசபை முறைமையை இந்தியாவினது உதவியுடன் முழுமையாக (காணி - பொலிஸ் அதிகாரங்கள் உட்பட) அமுலாக்கக் கோருவது.

இந்த இரண்டு வழிமுறைகளுமே இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு சாத்தியப்படக்கூடிய தீர்வுகளாகும். அதைவிடுத்து. சமஸ்டி என்று மீண்டும் கோருவது நடைமுறைச்சாத்தியமற்றது மட்டுமல்ல. அந்த வார்த்தையால் (அது பிரிவினைக்கொப்பானது என) ஏற்கனவே அரண்டு போயிருக்கிற சிங்கள மக்களை மேலும் அச்சமூட்டி பிரச்சினையைச் சிக்கல் படுத்துவதிலேயே முடியும்.

மேற்கத்தைய சக்திகளின் உதவியுடன் இலங்கையில் அவர்களுக்குச் சாதகமான மைத்திரி - ரணில் அரசு உருவாகியிருக்கின்ற இன்றைய சூழலை பொன்னான வாய்ப்பு என்று வர்ணிக்கின்ற. அந்த அரசுடன் சங்கமித்துப்போய் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும். இதர தமிழ்த் தலைமைகளும். இதைக் கவனத்தில் கொள்வார்களா? அல்லது வழமை போல இனவாதமும் பிரிவினைவாதமும் பேசி. தமிழ் சமூகத்தை மீண்டும் மீண்டும் படுகுழியில் தள்ளப்போகிறார்களா? என்பதைக் காலம்தான் தீர்மானிக்கவேண்டும்.

- வானவில் இதழ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்று தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்து போராட்டம் நடத்தியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் - சுதந்திரப்போராட்டம் பற்றிய பார்வை.

கடந்தவாரத் தொடர்ச்சி...

மாநாட்டுக்கு வெளிநாடுகளில் இருந்து வந்த தமிழ் அறிஞர்கள் நாதஸ்வரம் முழங்க வரவேற்கப்பட்டனர்.

திட்டமிட்டபடி ஜனவரி 3ம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் உலகத் தமிழ் மாநாடு தொடங்கியது. தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகளார் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற ஈழப்பிரிவு தலைவர் எஸ். வைத்தியநாதன் தலைமைதாங்கினார். இதில் தமிழ் அறிஞர்களான மதுரைப் பல்கலைக்கழக பேராசிரியர் எம். சண்முகம்பிள்ளை. திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் சி.நெய்னார் முகம்மது. ஜேர்மன் நாட்டுப் பேராசிரியர் கே.எல்.ஜெனட். சுவீடன் ஆய்வாளர் பிரிக்கோம். பேராசிரியர் சாலை இளந்திரையன். சாலினி இளந்திரையன். உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம். புலவர் ஈரோடு இராசு. கொடுமுடி சண்முகம் உள்ளிட்ட ஏராளமான தமிழ் அறிஞர்கள் பங்கேற்றனர்.

அமெரிக்கா. இலங்கை. இங்கிலாந்து. சுவீடன். இத்தாலி. பிரான்ஸ். ஹோலண்ட். மேற்கு ஜேர்மனி. சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளைச்சேர்ந்த அறிஞர்களும். தமிழ்நாட்டைச்சேர்ந்த தமிழ் அறிஞர்களும் மாநாட்டில் தமிழிலும். ஆங்கிலத்திலும் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். தமிழின் பெருமைகளையும். தமிழர்களின் மாண்பையும் விளக்கும் வகையில் அலங்கார வண்டிகள் அணிவகுப்பும். பண்பாட்டுக் கண்காட்சியும் நடைபெற்றன.

மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டு அறிஞர்களுக்கு வழியனுப்பு விழா 10ம் திகதி யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்காக அரங்கு பதிவு செய்யப்பட்டிருந்தபோதிலும். திறந்தவெளி மேடை திறந்திருக்க மைதானத்தின் வாசல் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. மாநகர மேயரிடம் கடிதம் வாங்கி வந்தால் மட்டுமே அவை திறக்கப்படும் என்று அரங்கக் காப்பாளர் அறிவித்தார். மேயர் அல்பிரட் துரையப்பாவை கண்டுபிடிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எங்கு தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் வீரசிங்கம் மண்டபம் முன்னால் அவசரமாக ஒரு மேடை அமைக்கப்பட்டது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள். பேராசிரியர் சி.நெய்னார் முகம்மது உரையாற்றிக்கொண்டிருந்தார்.

இரவு 8.30 மணிக்கு பொலீஸ் உதவி சூப்பிரண்ட் சந்திரசேகரா. பொலீஸ் பட்டாளத்தோடு 'ஜீப்'களில் வந்து இறங்கினார். பொலீசார் 'ஜீப்'களில் இருந்து இறங்கி அணிவகுத்து நின்றனர். 'ஜீப்'களை முன்னோக்கி செலுத்துமாறு சந்திரசேகரா உத்தரவிட்டார். அதற்குப்பின்னால் பொலீசார் நடந்து சென்றனர். கலைந்து செல்லுமாறு ஒலிபெருக்கி மூலம் சந்திரசேகரா மக்களுக்கு உத்தரவிட்டார்.

மாநாட்டுத் தொண்டர்கள் அவரிடம் சென்று "கூட்டத்தில் குழப்பம் செய்யவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டனர். அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல். பொலீசார் தாக்குதலைத் தொடுத்தனர். திரண்டிருந்த திரளான மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினார்கள். நெரிசலில் சிக்கி பலர் காயம் அடைந்தனர். அவர்களை பொலீசார் ஓட ஓட விரட்டியடித்தனர். அருகேஇருந்தசேறு நிறைந்த குளத்தில் பலர் விழுந்தனர். அவர்களை யாழ்ப்பாண இளைஞர்கள் காப்பாற்றி கரை சேர்த்தனர்.

இந்த நிலையில் பொலீசார் கண்ணீர் புகைக்குண்டுகளை கண்மூடித்தனமாக வீசினார்கள். அதில் ஒரு குண்டு மேடைக்கு அருகே விழுந்தது. மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் வைத்தியநாதன் அங்கேயே மயக்கம் அடைந்தார். துப்பாக்கியால் வானத்தை நோக்கி பொலீசார் சுட்டனர். அதில் இருந்து வெளியேறிய குண்டு மின்சாரக் கம்பியில் பட்டு. கம்பி அறுந்து விழுந்தது. இதனால் மின்சாரம் தாக்கி 7 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். நெரிசலில் சிக்கி 2 பேர் உயிர் இழந்தனர். 'எங்கள் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு முதல் மரியாதை தராமல் நடக்கும் நிகழ்ச்சி. இப்படித்தான் முடியும்' என்று குமாரசூரியரும். அல்பிரட் துரையப்பாவும் உள்ளூர மகிழ்ந்தனர். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்க சிறிமாவோ பண்டாரநாயக்கா மறுத்துவிட்டார். மாநாடு நடந்தபோது. மக்கள்தான் பொலீசைத் தாக்கியதாக அவர் குற்றம்சாட்டினார்.

மாநாட்டில் குழப்பம் விளைவித்த பொலீஸ் அதிகாரி சந்திரசேகராவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. அரசாங்கத்தில் இடம்பெற்றிருந்த ஒரே தமிழ் அமைச்சர் குமாரசூரியரும் இரங்கல் தெரிவிக்கும் அடிப்படை நாகரீகம் அற்றவராக இருந்தார். மாநாட்டுக் கலவரம் தொடர்பாக. உண்மை நிலையைக் கண்டறிய அரச சார்பற்ற அமைப்பான 'யாழ்ப்பாண பிரஜைகள் குழு' ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்தது. இதன் தலைவராக ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஓ.எல்.டி.கிரெஸ்டர் நியமிக்கப்பட்டார். இந்த விசாரணைக்குழு தனது அறிக்கையை 1974ம் ஆண்டு பெப்ரவரி 18ம் திகதி அளித்தது. அதில், "எந்த வித ஆத்திரமூட்டலும் இன்றி பொலீசார் கண்ணீர் புகை பிரயோகம் செய்தனர். தேவையில்லாமல் மக்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு பொலீசாரே பொறுப்பு" என்று கூறப்பட்டிருந்தது. இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் முடிவை ஏற்கஅரசு மறுத்துவிட்டது.

### இந்திரா - திருமதி பண்டாரநாயக்கா ஒப்பந்தம். இலங்கைக்கு கச்சதீவைத் தானமாக வழங்கல் (28.06.1974)

தமிழ்நாட்டுக் கடற்கரையில் இருந்து 12மைல் தூரத்தில் உள்ள கச்சதீவை. இலங்கைக்கு இந்தியா தானமாகக் கொடுத்தது. இதற்கான ஒப்பந்தத்தில். இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியும். இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் 1974ம் ஆண்டு ஜூன் 28ம் திகதி கையெழுத்திட்டனர்.

தமிழகத்திற்கும். இலங்கைக்கும் இடையில் உள்ளது கச்சதீவு. ராமேஸ்வரத்தில் இருந்து ஏறத்தாழ 12 மைல் தூரத்தில் இருக்கிறது. முன்பு இந்தத் தீவு. ராமநாதபுரம் ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. ஆனால். இது தங்களுக்கே சொந்தம் என்று. சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை உரிமை கொண்டாடியது. இலங்கை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா டெல்லி வந்திருந்தபோது பிரதமர் இந்திராகாந்தியுடன் இதுபற்றி பேச்சு நடத்தினார். கச்சதீவு பிரச்சினையில் உடன்பாடு காண்பது என்று. அப்போது தீர்மானிக்கப்பட்டது. "கச்சதீவு தமிழ்நாட்டுக்கே சொந்தம். அதை இலங்கைக்கு தரக்கூடாது" என்று தமிழக அரசு வற்புறுத்தி வந்தது. முதல்-அமைச்சர் கருணாநிதி பிரதமர் இந்திராகாந்தியை சந்தித்தபோது இதை வலியுறுத்தினார்.

கச்சதீவை இலங்கைக்கு கொடுப்பது என்று இந்திய அரசு முடிவு செய்துவிட்டது. 28-6-1974 அன்று. கச்சதீவு பற்றிய ஒப்பந்தத்தை இலங்கையில் இருந்து வெளிநாட்டு இலாகா காரிய தரிசி [illegible] விமானத்தில் [illegible]. அதில் இந்திரா கையெழுத்திட்டார். அதேபோல. டெல்லியில் இருந்து வெளிநாட்டு இலாகா காரியதரிசி கேவல்சிங். கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கைக்கு கொண்டு போனார். அதில் இலங்கை பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கையெழுத்திட்டார். இரண்டு பிரதமர்களும் ஒரே நேரத்தில் கையெழுத்து போடுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

கச்சதீவு 280ஏக்கர் பரப்புள்ளது. கிழக்கு மேற்காக ஒரு மைல் நீளமும். தெற்கு வடக்காக அரை மைல் அகலமும் உள்ளது. அங்கு கிறிஸ்தவ கோவில் ஒன்று இருக்கிறது. ஆண்டுதோறும் கச்சதீவில் திருவிழா நடைபெறும்போது. இந்தியாவில் இருந்தும். இலங்கையில் இருந்தும் கிறிஸ்தவர்கள் படகுகளில் செல்வார்கள். இருதேசங்களையும் சேர்ந்த மீனவர்களும் கச்சதீவுக்கு சென்று மீன் பிடிப்பது உண்டு. அங்கு குடிதண்ணீர் இல்லையாதலால். மக்கள் நிரந்தரமாக வசிக்கவில்லை.

முதல்-அமைச்சர் கருணாநிதியை நிருபர்கள் பேட்டிகண்டு. "கச்சதீவை இலங்கைக்கு கொடுப்பதற்கு முன்னால் மாநில அரசின் கருத்து கேட்கப்பட்டதா?" என்று கேட்டனர். அதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:- "இரண்டு வாரங்களுக்கு முன்னால். வெளிநாட்டு இலாகா செயலாளர் கேவல்சிங் இங்கு வந்தபோது. என்னிடம் அதுபற்றி சில விபரங்களை விவாதித்தார். கச்சதீவு விஷயத்தில் தமிழ் மக்களுடைய உணர்ச்சியை நான் அவரிடத்தில் விளக்கி இருக்கிறேன்." இவ்வாறு கருணாநிதி கூறினார். ராமநாதபுரம் ராஜா ராமநாதசேதுபதி நிருபர்களிடம் கூறுகையில், "மத்திய அரசின் முடிவு வருத்தத்தைதருகிறது. கண்ணீர் விட்டு அழுவது தவிர வேறு வழி இல்லை" என்றார்.

கச்சதீவு ஒப்பந்தம் பற்றிய அறிக்கை ஒன்றை பாராளுமன்றத்தில் வெளிநாட்டு இலாகா மந்திரி சுவரண்சிங் தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டு இருந்ததாவது:- தமிழ்நாட்டில் இருந்து 12.5 மைல் தூரத்திலும். இலங்கையில் இருந்து 10.5மைல் தூரத்திலும் இருக்கும் கச்சதீவில் இலங்கையைச் சேர்ந்தவர்களோ. இந்தியாவைச் சேர்ந்தவர்களோ எப்பொழுதும் நிரந்தரமாக குடியிருந்தது இல்லை. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே கச்சதீவு. இந்தியாவுக்கு சொந்தமா அல்லது இலங்கைக்கு சொந்தமா என்றபிரச்சினை இருந்தது. அதன்பிறகு ஒரு தீர்மானமான முடிவு ஏற்படும் வரை கச்சதீவை இரண்டு நாடுகளும் சொந்தம் கொண்டாடக்கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இரண்டு நாடுகளும் ஒரு பிரச்சினையைப்பேசி தீர்க்க முடியாவிட்டால் வேறு யாராவது மூன்றாவது நபர் தலையிட்டு சமரசம் செய்து வைக்கவேண்டும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில். அண்டை நாடு சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையையும் மூன்றாவது நபர் தலையீடு இல்லாமல் நேரடியாக பேசித் தீர்த்துக்கொள்ளவே விரும்புகிறது. கச்சதீவு பற்றி தமிழ்நாடு. கோவா. பம்பாயிலும் மற்றும் வெளிநாடுகளிலும் ஆதாரங்கள் திரட்டப்பட்டன. இந்த ஆதாரங்கள் பற்றி இரண்டு நாடுகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் பேச்சு நடத்தி வந்தனர்.

கச்சதீவு அமைந்து இருக்கும் பாக்.ஜலசந்தி பற்றி இரண்டு நாடுகளுக்கும் எல்லைத்தகராறு வரக்கூடாது என்பதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிவிட்டது. இதுவரை கிடைத்த ஆதாரங்களை வைத்து கச்சதீவை இலங்கைக்கு வழங்கும் வகையில்ஒப்பந்தம்செய்துகொண்டது நியாயமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

இந்தியா-இலங்கை ஆகிய நாடுகள் இடையே கச்சதீவு பற்றி ஏற்பட்ட ஒப்பந்த விபரம் வருமாறு:- ஒப்பந்தப்படி கச்சதீவு இலங்கைக்கு சொந்தம் என்றாலும் அந்த தீவுக்கு இந்திய மக்கள் போவதற்கு "பாஸ்போர்ட்" (அனுமதி) வாங்க வேண்டியது இல்லை. கச்சதீவு அமைந்து இருக்கும் கடல் பகுதியில் (பாக் ஜலசந்தி) இரண்டு நாட்டு மீனவர்களும் முன்போல் மீன் பிடிக்கலாம். இரண்டு நாடுகளின் படகுகளும் அந்த பகுதியில் வழக்கம் போல் தடை இல்லாமல் போய்வரலாம். எண்ணைக்கிணறு பாக் ஜலசந்தியில் புதிதாக எல்லை பிரிக்கப்பட்டு இருக்கும் பகுதியை மீறி இந்தியாவோ. இலங்கையோ எண்ணை கிணறு தோண்ட விரும்பினால். இரண்டு நாடுகளும் கலந்துபேசி கூட்டு முயற்சியுடன் எண்ணை வளம்பெருக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்." மேற்கண்டவாறு கூறப்பட்டு இருந்தது.

### - கச்சதீவு ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்பு - "தமிழ்நாட்டுக்கே உரியது கச்சதீவு" ஆதாரங்களுடன் இந்திராவுக்கு கருணாநிதி எழுதிய கடிதம்

"கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தம்" என்று ஆதாரங்களுடன் பிரதமர் இந்திரா காந்திக்கு தமிழக முதல்-அமைச்சர் கலைஞர் கருணாநிதி கடிதம் எழுதினார். கச்சதீவு பற்றி இந்திரா காந்தியும். திருமதி பண்டாரநாயக்காவும் பேச்சு நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே. கச்சதீவு தமிழ்நாட்டுக்கே உரியது என்பதை வலியுறுத்தி. இந்திரா காந்திக்கு கருணாநிதி கடிதம் எழுதினார்.

"கச்சதீவு பிரச்சினை குறித்து வெளிநாட்டு இலாகா காரிய தரிசி கேவல்சிங் என்னுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து எனது இலாகா அதிகாரிகள் கச்சதீவு பற்றிய ஆதாரங்களை சேகரித்தார்கள். கச்சதீவு. இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக ஒருபோதும் இருந்ததில்லை என்று நிரூபிப்பதற்கு தேவையான ஏராளமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

நெதர்லாந்து நாட்டு மன்னருக்கும். கேண்டி அரசருக்கும் இடையே 14-2-1776 அன்று ஏற்பட்ட ஒப்பந்தம். டச்சு நாட்டிடம் இருந்த கடற்கரை பகுதிகள் இங்கிலாந்து அரசுக்கு மாற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தம். 17-3-1762 அன்று ஜான் சுரூடர் என்பவர் எழுதிய நினைவுக் குறிப்புகள். டச்சு. போர்த்துகீசிய மன்னர் காலத்துவரை படங்கள் ஆகிய எல்லா குறிப்புகளும் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதைக் காட்டவில்லை. 1954ம் ஆண்டு வெளியான இலங்கையின் வரைபடத்திலும் ("மேப்") கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதியாக குறிக்கப்படவில்லை.

நீண்ட நெடுங்காலமாக தமிழ்நாட்டு கடற்கரை பகுதியில் முத்துக்குளித்தல். சங்கு எடுப்பு ஆகிய உரிமைகள் ராமநாதபுரம் ராஜா உட்பட தென் இந்திய மன்னர்களுக்கே உரித்தானது என்பதை வரலாற்று ஆதாரங்கள் காட்டுகின்றன. கச்சதீவு செல்லும் பாதையிலும் கச்சதீவின் மேற்கு பகுதி கரை ஓரத்திலும் சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு இருந்தது என்பதை காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக அவர் எந்தக்காலத்திலும் இலங்கை அரசுக்கு கப்பம் கட்டியது இல்லை. கிடைத்து இருக்கும் இந்த ஆதாரங்களைக் கொண்டு கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த அகில உலக நீதிமன்றிலும் எடுத்துக்கூறி நிரூபிக்க முடியும் என்று சென்னை சட்டக்கல்லூரியின் ஆராய்ச்சி பிரிவு கருத்துத் தெரிவித்து இருக்கிறது.

தொடரும்...

மறவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்



## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் உலக நடன விழா

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் உலக நடன விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இராஜதுரை அரங்கில் காலை 10 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வுகளுக்கு நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி த.ஜெயசங்கர் தலைமை தாங்கியதுடன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மெய்யியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஃ.எஸ்.எம் அனஸ் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்களுக்கான மாகாணப் பணிப்பாளர் திருமதி வி.சிவப்பிரியா சிறப்பு அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

அருகிவரும் பாரம்பரிய நடனங்களான பறை, மேளம், புலிக்கூத்து, களிகம்பு, வசந்தன் கூத்து மற்றும் சிலம்பம் ஆகிய சமுதாய நடனங்கள் நிறுவக வளாகத்தில் நடைபெற்றன. வேடுவர் மற்றும் தெலுங்கு இனங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து தமது பாரம்பரிய கலைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து கலைஞர்களுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றது. அத்துடன், நிகழ்வுகள் மாலை 06 மணிமுதல் இரவு 09 மணிவரை இராஜதுரை அரங்கில் நடைபெற்றன. மாலை நிகழ்வுகளுக்கு கலைஞர் வேல் ஆனந்தன், யாழ் கல்வி வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் பத்மினி செல்வேந்திரகுமார், யாழ் பல்கலைக்கழக நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்செல்வி கிருபைராஜா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர். மாலை நிகழ்வின் ஒரு அம்சமாக அதிதிகளுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவம் அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு வகையான நடன ஆற்றுகைகள் இடம்பெற்றன.

கண்டிய நடனம், மோகினி ஆட்டம், பரதநாட்டியம், புத்தாக்க நடனம் மற்றும் சமூகமுவ நடனம் என பல வகையான சமூகங்களைச் சேர்ந்தவர்களின் நடனங்கள் இடம்பெற்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கலைஞர்கள் கலை ஆர்வலர்கள் பலர் இந்த நடன ஆற்றுகைகளைக் காண வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சங்கானை - சங்கரத்தை வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

செட்டியார்மடம் சங்கரத்தை-சங்கானை பிரம்பதை வீதியின் 02 கிலோமீட்டர் பகுதி, 04 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டங்களை மாலை 3.30 மணியளவில் வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மாகாண சபையின் உறுப்பினர்கள் ஆனந்தி சசிதரன், கஜதீபன் ஆகியோர் இணைந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நன்கொடையின் (PSDG)கீழ்04மில்லியன்நிதிஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் வலி மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியை மாகாண சபையின் உறுப்பினர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும் அப்பகுதி மக்களது நலனைக் கருத்தில் கொண்டும் வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களால் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட தலா 6 மில்லியன் ஒதுக்கீட்டில், மாகாண சபை உறுப்பினர் ஆனந்தி சசிதரன் அவர்களது தெரிவின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன், அமைச்சின் செயலாளர் திரு.எஸ்,சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திரு.டி.சிவராஜலிங்கம், வலி மேற்கு பிரதேச செயலாளர் திரு.ஏ.சோதிநாதன், வீதி அபிவிருத்தித் திணைக்கள யாழ் மாவட்ட பிரதம பொறியியலாளர் திரு.வி.முரளிதரன், யாழ் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் திருமதி.அபிராமி வித்தியாபரன், மற்றும் கிராம சேவகர், அக்கிராமத்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமத்து மக்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## மூன்று வீடுகளில் களவு

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மூன்று வீடுகளில் ஆடைகள் உட்பட பல பொருட்களை களவாடிய பெண் ஒருவரை பொலிஸார் 29.04.2016 அன்று மாலை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் ரதல்ல தோட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது. இத்தோட்டத்தைச் சேர்ந்த குறித்த பெண் தொடர்ந்தும் இவ்வாறான களவாடும் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தொடர்ந்து இவ்வாறு களவாடிய மேற்படி பெண் 29.04.2016 அன்று மாலையும் மேற்படி தோட்டத்தில் தொழிலாளர்களின் குடியிருப்பில் நுழைந்து தனது கைவரிசையை காட்டியுள்ளார். இதனை அறிந்த பொதுமக்கள் உடனே நானுஓயா பொலிஸாருக்கு தகவலை வழங்கியதையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் இப்பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்து பொலிஸ் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணை 30.04.2016 அன்று மாலை நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(க.கிஷாந்தன்)

ஹட்டன்தொண்டமான்தொழிற்பயிற்சி நிலைய கலாசார மண்டபத்தில் 29.04.2016அன்று நடைபெற்ற நிகழ்வில் பல்வேறு சுயதொழில் பயிற்சியாக ஒரு வருடம் மற்றும் ஆறு மாதகால பயிற்சியை நிறைவு செய்த 600 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டபோது...

படங்களும் தகவலும்:- இராமச்சந்திரன்
(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)





## முல்லேரியாவில் துப்பாக்கிச் சூடு

முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. முல்லேரியா, வேதியாகொட்ட பிரதேசத்தில் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம நபர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபரை பொதுமக்கள் உடனடியாக முல்லேரியா மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றிருந்த போது அவர் உயிரிழந்திருந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்தில் கிரிபத்கொட, யாகொலை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதான நபர் ஒருவரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளதோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## தெய்வாதீனமாக உயிர் தப்பிய பயணிகள்

ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில், கொழும்பு பகுதியிலிருந்து நுவரெலியாவை நோக்கிச்சென்ற கார் ஒன்று வட்டவளை நகரத்திற்கு அண்மித்த பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. சனிக்கிழமை காலையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். சாரதிக்கு தூக்கம் ஏற்பட்டதன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


காரில் பயணித்த எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார் தெய்வாதீனமாக தப்பியுள்ளனர் எனவும் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## ஹப்புத்தலையில் பாரம்பரிய கிராமிய கலை நிகழ்சிகள்

ஹப்புத்தலை திருமறை இலக்கிய கலாமன்றத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய கிராமிய கலை நிகழ்சிகள் ஹப்புத்தலை காஹகலை தோட்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் காமன் கூத்து, ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மியாட்டம், கரகாட்டம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்பாணத்தைச்சேர்ந்த திருமறை இலக்கிய கலாமன்றத்தின் கலைஞர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



## புதுப் பொலிவு பெற்றுவரும் நுவரெலியா சீதையம்மன் ஆலயம்

மே மாதம் 18 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு உலக வரலாறு பெற்ற நுவரெலியா சீதையம்மன் ஆலயம் புதுப்பொலிவு பெற்று வருகின்றது.

இந்த ஆலயம் தற்போது புனர்நிர்மானம் செய்யப்பட்டு, வர்ணப் பூச்சுகளால் அலங்கரிக்கப்பட்டு, சிற்ப வேலைகள் செதுக்கப்பட்டு வருகின்றது. இந்த வேலைகள் அனைத்தும் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சிற்ப வர்ண கலைஞர்களினால் செய்ப்படுத்தப்பட்டு வருகின்றது.



வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண அபிவிருத்தி நன்கொடையின் (PSDG) கீழ் யாழ் மாவட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கு 134 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மண்டைதீவு லூப் வீதியின் வேலைத்திட்டத்தை 28-04-2016 வியாழன் மாலை 4.30 மணியளவில் ஆரம்பித்து வைத்த வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்கள், அங்கு உரையாற்றுகையில் எமது மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாறு வீதி அபிவிருத்திக்கான பல கோரிக்கைகள் இருந்தபோதும் மிகவும் [illegible] தேவைகள் இருக்கின்ற வீதிகளை தெரிவுசெய்து தரமாகவும் மக்களுக்கு உகந்ததாகவும் வீதிகளை அமைக்கவேண்டும் என்று எமது வீதி அபிவிருத்தி பணிப்பாளருக்கு தெரிவித்துள்ளேன் என்றும், அந்த வகையில் யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 134 மில்லியன் ரூபாய் நிதியில் சுமார் 20 வீதிகள் தெரிவு செய்து புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்விற்கு மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன், அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின்மாகாணப்பணிப்பாளர் திரு.டி.சிவராஜலிங்கம், வேலணை பிரதேச செயலாளர் திருமதி.[illegible] வேந்திரம், வீதி அபிவிருத்தித்திணைக்கள யாழ் மாவட்ட பிரதம பொறியியலாளர் திரு.வி.முரளிதரன், யாழ் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் திருமதி.அபிராமி வித்தியாபரன், மற்றும் கிராம சேவகர், அக்கிராமத்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய சபையினர், கிராமத்து மக்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## போதைப்பொருளை பதுக்கிய பிரபல நடிகை



இந்திய சினிமா நட்சத்திரங்கள் அவ்வப்போது சர்ச்சையில் சிக்குவது சாதரணம் தான். ஆனால், மராட்டிய நடிகை மம்தா சிக்கியிருப்பது திரையுலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மராட்டிய மாநிலம் தானேயில் கோலாப்பூர் என்ற இடத்தில் ஒரு மருந்து தயாரிப்பு பகுதியில் சமீபத்தில் சோதனை நடந்துள்ளது. இதில் ரூ.2000 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்களை பதுக்கிவைத்துள்ளனர்.

இதுகுறித்து விசாரிக்கையில் இதில் பிரபல நடிகை மம்தா மற்றும் அவருடைய கணவருக்கும் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. இவர் தமிழில் நணபர்கள் என்ற படத்தில் நடித்தவர். இப்படத்தை விஜயின் அம்மா ஷோபா இயக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவர் என்னை கிழித்து தொங்கப்போட்டு விடுவார் – சிவா



சிவகார்த்திகேயன் தற்போது முன்னணி நடிகர் என்றாலும், இதற்கு முன் அவர் நல்ல தொகுப்பாளரும் கூட. இவர் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சிகளை பார்க்கவே பல ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய இவர் 'சினிமாவில் கொமடி, ரொமன்ஸ் காட்சிகள் எல்லாம் சுலபமாக நடித்து விடுவேன். ஆனால், நடனம் என்றால் கொஞ்சம் நடுக்கம் வந்துவிடும். அதிலும் பாபா மாஸ்டர் ஒரு பாட்டிற்கு நடனம் அமைக்கிறார் என்றால் அவ்வளவு தான், என்னை கிழித்து தொங்கப்போட்டு விடுவார்' என கலாட்டவாக பதில் கூறினார்.

## தமிழ் சினிமாவை புறக்கணிப்பது ஏன், திருமணம் எப்போது? – சமந்தா



தெறி வெற்றியால் உற்சாகத்தில் உள்ளார் சமந்தா. இதைத்தொடர்ந்து சூர்யாவிற்கு ஜோடியாக 24 படத்தில் நடித்துள்ளார். இப்படம் அடுத்தவாரம் திரைக்கு வரவிருக்கின்றது. இவரிடம் தொடர்ந்து தமிழ் பட ப்ரோமோஷனுக்கு வரவில்லை ஏன்? என்று கேள்வி கேட்க, தெலுங்கு படங்களில் பிஸியாக நடித்து வருகிறேன். மற்றபடி என் படத்தை நானே புறக்கணிப்பேனா? என்று கேட்டுள்ளார்.

மேலும், திருமணம் குறித்துப் பேசுகையில் கண்டிப்பாக காதல் திருமணம் தான் செய்வேன் என்று தெரிவித்துள்ளார்.

## எல்லோரும் கன்னத்தை பிடித்து கிள்ளுகிறார்கள் - தெறி பேபி



தெறி படத்தின் மூலம் ஒட்டு மொத்த தமிழ் ரசிகர்களையும் கவர்ந்தவர் பேபி நைனிகா தான். விஜயின் மகளாக இவர் படத்தில் கொடுக்கும் கவுண்டர் வசனங்களுக்கு திரையரங்கமே அதிர்கின்றது. இவர் நடிகை மீனாவின் மகள் என்பது பலரும் அறிந்ததே.

இந்நிலையில் நைனிகா ஒரு பேட்டியில், 'படம் பார்த்துட்டு நீ நல்ல நடிச்சுருக்கனு சொல்றாங்க. இப்போ எல்லோருமே என்னை தெறி பேபின்னு தான் கூப்புறாங்க. அப்புறம் கன்னத்தப்பிடிச்சு கிள்ளுறாங்க. ஒரு செல்பி எடுத்துக்குறேன் உன்னோட அப்படின்னு கேட்குறாங்க. ஷூட்டிங்கில் எமி தான் என்னோடு க்ளோஸ் ப்ரண்ட்' என மழலை மாறாமல் பேசியுள்ளார்.

## நடிகர் சங்கத்திற்கு வேறு வழியில் கொட்டிய பணம்



நடிகர் சங்கத் தேர்தலில் வெற்றி பெற்று நாசர், விஷால் அணியினர் வெற்றிகரமாக சங்கத்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் நடிகர் சங்கத்திலேயே கமலின் புதிய படத்திற்கான பூஜை போடப்பட்டது. இந்த விழாவில் இப்படத்தை தயாரிக்கும் லைகா நிறுவனம் ரூ.1 கோடியை நடிகர் சங்கத்திற்கு கொடுத்துள்ளது.

இதுமட்டுமன்றி கமல்ஹாசன் ரூ.2.5 லட்சம் கொடுத்துள்ளார். ஏற்கனவே கடனை எல்லாம் அடைத்து சங்கத்தின் கையில் ரூ.8 கோடி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விஷாலுடன் முதன்முறையாக ஜோடி சேரும் பிரபல நாயகி



ஒரு பக்கம் நடிகர் சங்கம் வேலைகள் இருந்தாலும், இன்னொரு பக்கம் படங்களில் பிஸியாக நடித்து வருகிறார் விஷால். மருது படத்தைத் தொடர்ந்து விஷால் கத்திச்சண்டை என்ற படத்தில் நடிக்க இருக்கிறார். சுராஜ் இயக்க இருக்கும் இப்படத்தில் விஷாலுடன் முதன்முறையாக ஜோடி சேருகிறாராம் தமன்னா.

இப்படத்தில் வடிவேலு, சூரி, ஜெகபதி பாபு, சம்பத் உள்ளிட்டோரும் நடிக்கவிருக்கிறார்கள். மெட்ராஸ் எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில் எஸ்.நந்தகோபால் இப்படத்தை தயாரிக்கவுள்ளார். கொமடி கலந்த கமர்ஷியல் படமாக இது உருவாகவுள்ளது.

## எதிர்பார்த்த இடத்தில் நஷ்டம் அடைந்த தெறி



தெறிபடம் வெளியிட்ட அனைத்து இடங்களிலும் வசூல் வேட்டை நடத்தி வருகின்றது. அதிலும், கேரளாவில் இப்படம் ரூ.10 கோடிகளுக்கு மேல் வசூல் செய்து புது சாதனையை படைத்துள்ளது. இந்நிலையில் ஆந்திராவில் இப்படம் போலிஸ் என்ற பெயரின் டப் செய்து வெளியிடப்பட்டது. எப்படியாவது இந்த படத்தின் மூலம் ஆந்திராவில் மார்க்கெட்டை பிடித்துவிடலாம் என விஜய் எண்ணியிருந்தார்.

ஆனால், அங்கு இப்படம் சரியான ப்ரோமோஷன் இல்லாததால் ஒரு சில கோடிகள் நஷ்டத்தை சந்தித்துள்ளதாம். இது படக்குழுவிற்கு வருத்தத்தை அளித்துள்ளது.

## பூனம் பஜ்வா பிரபல இயக்குனருடன் ரகசிய திருமணம்



தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய படங்களில் நடித்துள்ள நடிகை பூனம் பஜ்வா பிரபல தெலுங்கு இயக்குனரை ரகசிய திருமணம் செய்துகொண்டுள்ளார். அவருக்கும், சுனில்ரெட்டி என்ற தெலுங்கு இயக்குனருக்கும் மூன்று நாட்களுக்கு முன்னரே ரெஜிஸ்டர் அலுவலகத்தில் திருமணம்நடந்துவிட்டதாகதகவல். வெகு நாட்களாக காதலித்து வந்ததாகவும், இருவரும் சமீபத்தில்தான் திருமணம் செய்ய முடிவெடுத்தார்களாம்.

## உங்களுக்காக 24 படத்தின் மிரட்டல் பன்ச் வசனம்



சூர்யா நடிப்பில் 24 படம் அடுத்தவாரம் திரைக்கு வரவிருக்கின்றது. இப்படம் குறித்த எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இப்படத்தில் ஆத்ரேயா என்ற கதாபாத்திரத்தில் நடிக்கும் சூர்யா மிரட்டும் வில்லனாக நடித்துள்ளாராம்.

இதில் இவரின் பேவரிட் வசனம் 'உன்ன அப்படியே கட்டிப்பிடிச்சி முத்தம் குடுத்து குத்தி குத்தி கொலை பண்ணனும் போல இருக்கு' என்று ஒரு காட்சியில் சொல்வது தானாம்.

## தெறி ஸ்டைலில் இது நம்ம ஆளு



சிம்பு நடிப்பில் நீண்ட நாட்களாக ரிலீஸ் ஆகாமல் இருக்கும் படம் இது நம்ம ஆளு. இந்நிலையில் இப்படம் கண்டிப்பாக மே மாதம் திரைக்கு வரும் என படக்குழு கூறிவிட்டது. மேலும், இப்படத்தை தேனாண்டாள் பிலிம்ஸ் வெளியிடவுள்ளது.

இப்படத்திற்கான டிக்கெட் முன்பதிவு சென்னையின் பிரபல திரையரங்கில் தற்போதே ஆரம்பித்துவிட்டதாம். இதற்கு முன்பு தெறி படத்திற்கு இப்படி முன் பதிவு பல நாட்களுக்கு முன்பே ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் சினிமா கடந்து கலக்கத் தயாரான அருண் விஜய்



என்னை அறிந்தால் படத்திற்கு பிறகு தமிழ் சினிமாவின் நம்பிக்கை நட்சத்திரமாகிவிட்டார் அருண் விஜய். இயக்குனர் அறிவழகனின் பெயரிப்படாத படம் ஒன்றில் நடித்துள்ள இவரின் 36 மணிநேர சண்டைக்காட்சியும் பரவலாக பாராட்டப்பட்டுள்ளது. ராம்சரணுக்கு வில்லனாக தெலுங்கு படம் ஒன்றிலும் நடித்து வருகிறார்.

மேலும் தற்போது கன்னட சினிமாவிலும் கால்பதித்துள்ளார். எங்கேயும் எப்போதும் இயக்குனர் சரவணன் இயக்கத்தில் வெளியான இவன் வேற மாதிரி படத்தின் கன்னட பதிப்பான சக்ரவ்யுஹா படத்தில் கன்னட சூப்பர்ஸ்டார் புனித் ராஜ்குமாருக்கு வில்லனாக நடிக்கிறார். இப்படத்தின் சண்டைக்காட்சிகள் தனித்துவமாக அனைவரும் பாராட்டும்படி இருக்குமாம்.



## கமலின் அடுத்த படம் குறித்த முழு விபரம்

கமல்ஹாசன் தன் புதுப்படத்திற்கான பூஜையை சென்னை நடிகர் சங்கத்தில் தொடங்கினார். ஏற்கனவே இப்படம் விக்ரம் படத்தின் இரண்டாம் பாகம் எனக் கூறப்பட்டது. பின் பல்ராம் நாயுடு கதாபாத்திரத்தில் முழுப்படமும் எடுக்கவுள்ளார் எனக் கூறப்பட்டது.

தற்போது அனைவரும் எதிர்பார்த்தது போல் பல்ராம் நாயுடு கதாபாத்திரம் தான் கமலின் அடுத்த படம். இதில் இவரின் மகளாக ஸ்ருதிஹாசன் நடிக்க, தெலுங்கு நடிகர் பிரம்மானந்தம் முக்கியமான ரோலில் நடிக்கவுள்ளார்.

இப்படத்திற்கு இசை இளையராஜா. இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளில் வரபடத்திற்கு சபாஷ் நாயுடு என்று தலைப்பு வைத்துள்ளனர்.

ஷங்கர் தற்போது 2.0 படத்தில் பிஸியாக இருக்கின்றார். இப்படத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன், அக்ஷய் குமார், எமி ஜாக்ஸன், சுதான் பாண்டே என பல நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர். இப்படத்தை 3டியில் வெளியிட ஷங்கர் முடிவு செய்துள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1956–2009வரை சிங்கள இனத்தால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட தமிழினப் படுகொலைகள்

கடந்தவாரத் தொடர்ச்சி...

135. செஞ்சோலை குண்டுவீச்சு - பள்ளிக்கூடத்தில் 14.08.2006அன்று 54பேர் சிங்கள வான்படையால் கொலை.

136. பொத்துவில் படுகொலை - வங்கியில் 17.09.2006அன்று 10பேர் சிங்கள சிறப்புப்படையால் கொலை.

137. புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு - வீட்டில் 16.10.2006அன்று 4பேர் சிங்கள சிறப்புப் படையால் கொலை.

138. கிளிநொச்சி மருத்துவமனை குண்டுவீச்சு மருத்துவமனையில் 02.11.2006அன்று 5பேர் சிங்கள வான்படையால் கொலை.

139. வவுனியா விவசாய கல்லூரி மாணவர் படுகொலை - கல்லூரியில் 18.11.2006அன்று 4பேர் சிங்கள ராணு வத்தால் கொலை.

140. கிழக்கு பகுதி படுகொலை - பல்வேறு இடங்களில் 08.12.2006அன்று 184பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

141. படகுத்துறை படுகொலை - குடியிருப்பு பகுதியில் 02.01.2007அன்று 15பேர் சிங்கள வான்படையால் கொலை.

142. மன்னார் கல்வியாளர்கள் படுகொலை- அலுவலகத்தில் 27.02.2007அன்று 2பேர் சிங்கள ராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியால் கொலை.

143. படுவான்கரை படுகொலை - குடியிருப்பு பகுதியில் 8.9.03.2007அன்று 5பேர் சிங்கள வான்படையால் கொலை.

144. சித்தாண்டி படுகொலை - குடியிருப்பு பகுதியில் 29.03.2007அன்று 6பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

145. செங்கலடி படுகொலை - தமிழ் புத்தாண்டின் போது 14.04.2007அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

146. சிலாவத்துறை கிளைமோர் தாக்குதல் - வேனில் 02.09.2007அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. அகதிகளுக்கு உணவுகொண்டு செல்லும்போது கிறிஸ்துவ பாதிரியார் வேனில் கொல்லப்பட்டார்.

147. பெரியமடு ஏவுகணைத் தாக்குதல் - இடம்பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 25.10.2007அன்று 15பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. ஏவு கணை வெடித்ததில் ஒரு துகள் நிறைமாத கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்ததில் சிசு வெளியே வந்துவிட்டது.

148. ரெட்டை செம்மணிகுலம் படுகொலை - சு த்திக்கொலை. 11.11.2007அன்று 3பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

149. தர்மபுரம் குண்டுவீச்சு - குடியிருப்பு பகுதியில் 25.11.2007அன்று 5பேர் சிங்கள வான்படையால் கொலை.

150. ஐயன்கன்குளம் கிளைமோர் தாக்குதல் பள்ளிப்பேருந்தில் 27.11.2007அன்று 9பேர் சிங்கள ராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணி யால் கொலை.

151. புலிகளின் குரல் வானொலி நிலைய தாக்குதல் - வானொலி நிலை யத்தில் 27.11.2007அன்று 10பேர் சிங்கள வான்படையால் கொலை.

152. தட்சனமடு கிளைமோர் தாக்குதல் - பள்ளிக்குழந்தைகள் பேருந்தில் 29.01.2008 அன்று 20பேர் சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியால் கொலை.

153. கிராஞ்சி குண்டுவீச்சு - குடியிருப்பு பகுதி யில் 22.02.2008அன்று 9பேர் சிங்கள வான்படையால் கொலை.

154. முறிகண்டி கிளைமோர் தாக்குதல் - மக்கள் பயணம் செய்த வேனில் 23.05.2008 அன்று 16பேர் சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியால் கொலை.

155. புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு - பதுங்கு குழி யில் 15.06.2008அன்று 4பேர் சிங்கள வான்படையால் கொலை.

156. மட்டக்களப்பு படுகொலை - பேருந்தில் 11.07.2008அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

157. வட்டமடு படுகொலை - உழவு நிலத்தில் 16.10.2008அன்று 4பேர் பல்வேறு இடங் களில் சிங்கள ராணுவம் மற்றும் அடை யாளம் தெரியாதவர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் கொல்லப்பட்டனர்.

158. கல்முனை படுகொலை - வணிக அங்காடிகள் 02.11.2008அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

159. மட்டக்களப்பு படுகொலை - பல்வேறு இடங்களில் 26.11.2008அன்று 80க்கும் மேல் பல்வேறு இடங்களில் சிங்கள ராணுவம் மற்றும் அடையாளம் தெரியாதவர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 80க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கொல்லப்பட்டனர்.

160. வன்னி படுகொலை - இடம்பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 31.12.2008அன்று 5பேர் சிங்கள வான் படையால் கொலை.

161. முரசுமோட்டை படுகொலை - குடியிருப்பு பகுதியில் 01.01.2009அன்று 5பேர் சிங்கள வான்படையால் கொலை.

162. முரசுமோட்டை படுகொலை - குடியிருப்பு பகுதியில் 01.01.2009அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

163. முல்லைத்தீவு படுகொலை - பெட்ரோல் பங்க் ∴பேருந்து பணி மனையில் 02.01.2009அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

164.தர்மபுரம்சந்திபடுகொலை-மருத்துவமனை அருகில் 08.01.2009அன்று 7பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

165. புதுக்குடியிருப்பு தாக்குதல் - குடியிருப்பு பகுதியில் 11.01.2009அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

166. புதுக்குடியிருப்பு தாக்குதல் - பல்வேறு இடங்களில் 16.01.2009அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

167. புதுக்குடியிருப்பு மற்றும் விசுவமடு தாக்குதல் - பல்வேறு இடங்களில் 18.01.2009அன்று 4பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

168. முல்லைத்தீவு தாக்குதல் - பல்வேறு இடங்களில் 18.01.2009அன்று 18பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

169. வன்னி படுகொலை - இடம்பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 20.01.2009அன்று 15பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

170. முல்லைத்தீவு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 22.01.2009அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. 23.01.2009அன்று 5பேர் கொலை.

171. உடையார்கட்டு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 24.01.2009அன்று 12பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

172.சுதந்திரபுரம் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 25.01.2009அன்று 21பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

173. வன்னி படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 28.01.2009அன்று 100க்கும் மேல் சிங்கள ராணுவத்தால் கொலை.

174. உடையார்கட்டு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 28.01.2009அன்று 69பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

175. வன்னி படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 29.01.2009அன்று 44பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

176. மூங்கிலாறு மற்றும் சுதந்திரபுரம் படு கொலை - பாதுகாப்பு வளையத்தில் 31.01.2009அன்று 39பேர் சிங்கள வான்படையால் கொலை.

177. மூங்கிலாறு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 01.02.2009அன்று 13க்கும் மேற்பட்டோர் சிங்கள வான்படையால் கொலை.

178. உடையார்கட்டு படுகொலை - மருத்துவமனையில் 02.02.2009அன்று 9பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. பாதுகாப்பு வளையத்தில் 04.02.2009அன்று 50க்கும் மேற்பட்டோர் சிங்கள ராணுவத்தால் கொலை.

179. சுதந்திரபுரம் மற்றும் இருட்டுமடு படுகொலை - மருத்துவமனையில் 05.02.2009அன்று 5பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

180. புதுக்குடியிருப்பு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 05.02.2009 அன்று 100க்கும் மேல் சிங்கள ராணுவத்தால் கொலை.

181. புதுக்குடியிருப்பு படுகொலை - பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் 07.02.2009அன்று 61பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

182. மாத்தளன் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 10.02.2009அன்று 36க்கும் மேல் சிங்கள ராணுவத்தால் கொலை.

183. புதுமாத்தளன் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 11.02.2009அன்று 16பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

184. தேவிபுரம் மற்றும் வள்ளிபுனம் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 14.02.2009அன்று 75க்கும் மேல் சிங்கள ராணுவத்தால் கொலை. 16.02.2009அன்று 260பேர் கொலை.

185. மாத்தளன் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 18.02.2009அன்று 108பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

186. ஆனந்தபுரம் படுகொலை - இடம் பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 18.02.2009அன்று 50க்கும் மேல் சிங்கள வான்படையால் கொலை.

187. இரணைப்பாலை படுகொலை - இடம் பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 19.02.2009அன்று 30குடும்பங்கள் சிங்கள வான்படையால் 48 மணிநேரத்தில் 50 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 130 பேர் படுகா யம் அடைந்தனர்.

188. வன்னி பகுதிகளில் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 21.02.2009அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. 22.02.2009அன்று 39பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

189. புதுமாத்தளன் படுகொலை - தற்காலிக மருத்துவமனையில் 24.02.2009அன்று 6பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

190. முல்லைத்தீவு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 28.02.2009அன்று 40பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. 01.03.2009அன்று 37பேர் சிங்கள ராணு வத்தால் கொலை.

191. முள்ளிவாய்க்கால் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 02.03.2009அன்று 45பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. முல்லைத்தீவில் சிங்கள ராணுவத்தின் தொடர் ஏவுகணை தாக்குதலில் 122பேர் 3 நாளில் கொல்லப்பட்டனர்.

192. மாத்தளன் தற்காலிக மருத்துவமனை படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 03.03.2009அன்று 13பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

193. முல்லைத்தீவு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 04.03.2009அன்று 73பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

194. பொக்கனை படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 04.03.2009அன்று 25பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

195. மாத்தளன் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 04.03.2009அன்று 23பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

196. இரட்டை வாய்க்கால் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 04.03.2009அன்று 10பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

197. இரணைப்பாலை படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 04.03.2009அன்று 23பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

198. ஆனந்தபுரம் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 05.03.2009அன்று 69பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

199. முள்ளிவாய்க்கால் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 06.03.2009அன்று 86பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

200. மாத்தளன் படுகொலை - இடம்பெயர்ந்தோர் வாழ்விடத்தில் 07.03.2009அன்று 53பேர் சிங்கள ராணு வத்தால் கொலை. ராணுவத்தின் தொடர் தாக்குதலில் 208பேர் 02 நாட்களில் கொல்லப்பட்டனர்.

201. முல்லைத்தீவு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 08.03.2009அன்று 71பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. பதுங்குகுழிகள் வெள்ளத்தில் நிறைந்ததால் தங்க இடம் இல்லாமல் குழந்தைகள் கொட்டும் மழையில் நனைந்தனர்.

202. அம்பைவன் பொக்கனை படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 09.03.2009அன்று 74பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

203. வன்னி பகுதிகளில் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 10.03.2009அன்று 129பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. சிங்கள ராணுவத்தின் தொடர் ஏவுகணை தாக்குதலில் 129பேர் 7 மணி நேரத்தில் கொல்லப்பட்டனர்.

204. முள்ளிவாய்க்கால் படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 11.03.2009அன்று 62பேர் சிங்கள ராணுவத்தால் கொலை.

205. முல்லைத்தீவு படுகொலை - பாதுகாப்பு வளையத்தில் 14.03.2009அன்று 69பேர் சிங்கள ராணுவத்தால் கொலை. முல்லைத்தீவு மருத்துவமுகாமில் பிறந்து தாய்ப்பால் அருந்தும் ஒரு பெண் குழந்தை ஏவு கணை வீச்சிற்கு ஆளாகி அறுவை சிகிச்சை.

206. வன்னி பகுதிகளில் தாக்குதல் - பாதுகாப்பு வளையத்தில் 15.03.2009அன்று 58பேர் சிங்கள வான்படையால் கொலை. பாதுகாப்பு வளையத்தில் 16.03.2009அன்று 29பேர் சிங்கள வான்படையால் கொலை.

பாதுகாப்பு வளையத்தில் 17.03.2009 அன்று 32பேர் சிங்கள வான்படையால் கொலை.

தொடரும்...

இரணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் கோவணத்தை உருவிய முஸ்லீம் அரசியல்வாதிகள், மைத்திரியின் கோவணத்தையும் உருவுவார்கள்



இலங்கைத் திருநாட்டில் சமாதானம் நிலவியுள்ள இந்தக் காலகட்டத்தில் தமக்கான தனி அரசியல் அலகு வேண்டும் என்று முஸ்லீம் அரசியல்வாதிகள் செயற்படுகின்ற விதமானது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை குட்டிச்சுவராக்கிவிட்டு. இன்று மைத்திரி-ரணிலை குட்டிச்சுவராக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். உலகத்தில் வாழ்கின்ற முஸ்லீம்களையும் இணைத்து தாம் 160கோடி எனக் கொக்கரிக்கும் இந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் இந்த நாட்டில் நன்மைபெறும் வகையில் தமிழினத்திற்கு என்ன செய்தார்கள்? முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று பையுடன் வந்த முஸ்லீம்கள் இன்று அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். சமுதாயத்தில் அவர்களுக்கும் ஒரு அந்தஸ்து வேண்டும் என்று அவர்களுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியதாகக் குறிப்பிட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ. எனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சூத்திரதாரிகளாக இவர்கள் செயற்பட்டமை கவலைக்குரிய விடயம்தான் என்கிறார்.

UNP அரசினைப் பொறுத்தவரை வர்த்தகத்திற்காக தமது கைக்கூலியாக அன்றிலிருந்து இன்றுவரை முஸ்லீம் இனத்தினைப் பயன்படுத்துகிறது.

முஸ்லீம் சமுதாயத்தினரை எடுத்துக்கொண்டால் மறைந்த அஷ்ரப் அவர்களைப்போன்ற சிறந்த குணம் படைத்த முஸ்லீம் அரசியல்வாதிகள் தற்போது இல்லை என்றுதான் கூறவேண்டும்.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல தமிழினத்திற்கு எதிராக முஸ்லீம்கள் செய்த இனவெறிக்கொலைகள் தொடர்பிலும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இவற்றைக்கூறி இனவாதத்தைத் தூண்டுவது எமது நோக்கமல்ல. குறிப்பாக கிழக்கு மாகாணத்தை தாம் சுவீகரித்துக்கொள்ளவேண்டும் என முஸ்லீம் தரப்பினர் துரிதமாக செயற்படுகின்றனர்.

முஸ்லீம் மக்கள் கிழக்கில் செறிந்துவாழ்கின்றனர் என்பது பிரச்சினையல்ல. அவர்களின் சனத்தொகைக்கேற்ப நிலப்பகுதி அவர்களுக்கு வேண்டும்.

அதனை அரசு வழங்கவேண்டும். ஆனால் தமிழ்த்தேசியம். த.தே.கூட்டமைப்பு. நாட்டின் இறையாண்மைக்கு எதிராக தமக்கான தனி அலகினைக்கோரி இந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கிழக்கு மாகாண த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக அமீர் அலி அவர்கள் தெரிவித்திருக்கும் விடயங்கள் ஒரு நாகரீகமான பேச்சு அல்ல என்றே கூறவேண்டும்.

த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவர்கள் புள்ளிவிபரங்களை அறியாமல் கருத்துத் தெரிவித்திருப்பது தவறு என்றே கூறவேண்டும். பணம் கொடுத்து மதம் மாற்றுகிறார்கள் என்ற சொற்பதம் இவர்களைக் கொதித்தெழ வைத்துள்ளது.

பண உதவிகளை அமைச்சர்களும். பாராளுமன்ற உறுப்பினர்களும் வழங்குவார்கள். அது மதம் மாற்றும் அடிப்படையில் அல்ல. இந்தக் காலகட்டத்தில் பணத்தினைக் கொடுத்தால் யார் தான் வாங்கமாட்டார்கள். இது இவ்வாறிருக்க மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் மைத்திரிபால சிறிசேன அவர்களை வைத்து தமது இலக்கான தனி அலகினைப்பெற முஸ்லீம் தலைவர்கள் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

இனியொரு யுத்தம் இங்கு இடம்பெறுமாகவிருந்தால் தமிழ்-முஸ்லீம் இனங்களே சண்டைபிடித்துக்கொள்ளும். தமிழினம் கடந்த 60வருடங்களாக ஆயுதம். அஹிம்சை எனப்போராடி பெற்றுக்கொள்ள முடியாமல் போன தமிழீழத்தை தமிழினத்துடன் இணைந்து குளிர்காய்ந்த முஸ்லீம் அரசியல்வாதிகள் பெற்றுக்கொள்ள எண்ணுவது தவறு.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் முஸ்லீம் அரசியல்வாதிகளின் கடும்போக்கு உணரப்படுகிறது. பொதுபலசேனா என்ற பௌத்த அமைப்பு முஸ்லீம் இனத்தினை ஓரங்கட்ட எண்ணியதன் காரணம்என்ன? இதற்குள்பல்வேறான முரண்பாடுகள் இருக்கின்றன.

இலங்கை அரசியல் வரலாற்றில் மீண்டுமொரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் முஸ்லீம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் அமையப்பெறுவது கவலைக்குரிய விடயம். இறுதியில் மைத்திரியின் கோவணத்தை உருவும் போதுதான் முஸ்லீம் அரசியல்வாதிகள் பற்றிய விழிப்புணர்வு இவ்வரசாங்கத்தினர் மத்தியில் ஏற்படுத்தப்படும்.

நெற்றிப்பொறியன்



மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் மற்றும் அரசியல்வாதிகளினால் இழுபறி நிலையில் இருந்து வருகின்றது. இந்த நிலையில் உலக தொழிலாளர் தினம் மே முதலாம் திகதி (01.05.2016) நாடாளவீய ரீதியில் வைபவங்களாக முன்னெடுக்கப்பட்டது.

தொழிலாளர் தினத்தில் தோட்ட தொழிலாளர்களுடைய சம்பள உயர்வை உரிய வேளையில் பெற்றுக்கொடுப்பதற்கும் அதற்கான ஒப்பந்தத்தை கைச்சாதிட்டபடியும் அரசாங்கத்தின் கவனம் திரும்பவேண்டும் எனக்கோரி 01.05.2016 அன்று அட்டன் நகரில் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக ஒரு மணி நேர போராட்டம் இடம்பெற்றது. இந்த போராட்டத்தினை நுவரெலியா மாவட்ட தோட்ட தொழிலாளர்களை உள்ளடக்கிய சிவில் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் முன்னெடுத்து செய்தனர். இதன்போது போராட்டக்காரர்கள் கறுப்புபட்டி அணிந்து பதாதைகளை ஏந்திய வண்ணம் இந்த சிவில் அமைப்பினால் எழுதப்பட்ட மகஜர் ஒன்றினையும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க.கிஷாந்தன்)





மேதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விசேட பேரணி ஒன்று இடம்பெற்றது. இந்த விசேட பேரணி கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல்பல்கலைக்கழகவளாகத்தில் ஆரம்பமாகி பலாலி வீதி வழியாகச் சென்று மீண்டும் பல்கலைக்கழக வளாகத்தை வந்தடைந்தது.

குறித்த பேரணியின்போது கல்விக்கு 6 சதவீத நிதி ஒதுக்கப்படவேண்டும். அரசியல் நியமனங்கள் நிறுத்தப்படவேண்டும் மற்றும் கல்வித்துறையில் நடைபெறும் ஊழல் மோசடிகள் விசாரிக்கப்படவேண்டும் என்பன போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டம் இடம்பெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையிலான பல்கலைக்கழக விரிவுரையாளர்கள். தொழிற்சங்க ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை ஆசிரியர் சங்கம். யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து இந்த மேதின ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தன.

## கைதுகளின் போது சர்வதேச நியமங்கள் பின்பற்றப்படவேண்டும் – சமாதான பேரவை

வடக்கு கிழக்கில் முன்னாள் விடுதலைப் புலிகள் கைது செய்யப்படுவது தொடர்பில் பதற்ற நிலை தோன்றியுள்ளதாக தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் மீண்டும் ஒன்று சேர்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில். கைதுகள் இடம்பெறும் போது உரிய சர்வதேச நியமங்களும் நடைமுறைகளும் பின்பற்றப்படவேண்டும் என பேரவை கோரியுள்ளது.

ஏற்கனவே மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமை காரணமாக நாட்டின் செல்வாக்கில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே. தற்போது நாட்டுக்கு தேவையான நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உரிய நடைமுறைகளை பின்பற்றவேண்டும்.

இதேவேளை. வடக்கு கிழக்கு மக்கள் விடுதலைப்புலிகளுடன் இணையாமல் இருக்கக்கூடிய பொறுப்பை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உரிய வகையில் செயற்படுத்த வேண்டும் என்றும் தேசிய சமாதான பேரவை கோரியுள்ளது.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக உலகம்

## நல்வாழ்விற்கான நற்சிந்தனைகள்

பேசும்முன் கேளுங்கள். எழுதும்முன் யோசியுங்கள். செலவழிக்கும்முன் சம்பாதியுங்கள். சிலவேளைகளில் இழப்புதான் பெரிய ஆதாயமாக இருக்கும்.

யாரிடம் கற்கிறோமோ அவரே நம் ஆசிரியர். கற்றுக்கொடுப்பவரெல்லாம் ஆசிரியர் அல்லர்.

நாம் மாறும்போது தானும் மாறி. நாம் தலையசைக்கும்போது தானும் தலையசைக்கும் நண்பன் நமக்குத் தேவையில்லை. அதற்கு நம் நிழலே போதும்.

நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்.

நான் குறித்த நேரத்திற்குக் கால்மணி நேரம் முன்பே சென்று விடுவது வழக்கம். அதுதான் என்னை மனிதனாக்கியது.

நம்மிடம் பெரிய தவறுகள் இல்லை எனக் குறிப்பிடுவதற்கே, சிறிய தவறுகளை ஒப்புக்கொள்கிறோம்.

வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

சமையல் சரியாக அமையாவிடில் ஒருநாள் இழப்பு. அறுவடை சிறக்காவிடில் ஓராண்டு இழப்பு. திருமணம் பொருந்தாவிடில் வாழ்நாளே இழப்பு.

முழுமையானவன் இன்னும் பிறக்கவில்லை இனியும் பிறக்க மாட்டான்.

பரபரத்து ஓடுவதில் பயனில்லை. உரிய நேரத்தில் புறப்படுங்கள்.

எல்லோரையும் நேசிப்பது சிரமம்தான் ஆனால் பழகிக்கொள்ளுங்கள்.

நல்லவர்களோடு நட்பாயிருங்கள் நீங்களும் நல்லவனாகலாம்.

காரணமே இல்லாமல் கோபம் தோன்றுவதில்லை. ஆனால் கோபத்தின் காரணம் பெரும்பாலும் நல்லதாய் இருப்பதில்லை.

விந்தையான சிலரைப் பார்க்கும்போது இவர்கள் ஏன் இப்படி? என்பதைவிட. இவர்கள் இப்படித்தான் என எண்ணிக்கொள்ளுங்கள்.

யார் சொல்வது சரி என்பதல்ல. எது சரி என்பதே முக்கியம்.

ஆயிரம் முறை சிந்தியுங்கள். ஒருமுறை முடிவெடுங்கள்.

அச்சம்தான் நம்மை அச்சுறுத்துகிறது. அச்சத்தை அப்புறப்படுத்துவோம்.

நியாயத்தின் பொருட்டு வெளிப்படையாக எவருடனும் விவாதிப்பது சிறப்பாகும்.

உண்மை புறப்பட ஆரம்பிக்கும் முன் பொய் பாதி உலகத்தை வலம் வந்துவிடும்.

உண்மை தனியாகச் செல்லும். பொய்க்குத்தான் துணை வேண்டும்.

வாழ்வதும் வாழவிடுவதும் நமது வாழ்க்கைத் தத்துவங்களாக இருக்கட்டும்.

தன்னை ஒருவராலும் ஏமாற்ற முடியாது எனச் செருக்கோடு இருப்பவனே கண்டிப்பாக ஏமாறிப்போகிறான். உலகம் ஒரு நாடக மேடை. ஒவ்வொருவரும் தம் பங்கை நடிக்கிறார்கள்.

செய்வதற்கு எப்போதும் வேலை இருக்கவேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்.

அன்பையும் ஆற்றலையும் இடைவிடாது வெளிப்படுத்துகிறவர் ஆர்வத்துடன் பணி புரிவர்.

வெற்றி பெற்றபின் தன்னை அடக்கி வைத்துக்கொள்பவன். இரண்டாம் முறையும் வென்றவனாவான்.

தோல்வி ஏற்படுவது. "அடுத்தச் செயலைக் கவனமாகச்செய்" என்பதற்கான எச்சரிக்கை.

பிறர் நம்மைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நாம் பிறரைச் சமாதானப்படுத்த முயலவேண்டும்.

கடினமான செயலின் சரியான பெயர்தான் சாதனை. சாதனையின் தவறான விளக்கம்தான் கடினம்.

ஒன்றைப்பற்றி நிச்சயமாக நம்ப வேண்டுமென்றால் எதையும் சந்தேகத்துடனே துவக்கவேண்டும்.

சரியானது எது என்று தெரிந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதற்குப் பெயர்தான் கோழைத்தனம்.

ஒரு துளி பேனா மை பத்து இலட்சம் பேரைச் சிந்திக்க வைக்கிறது.

ஒவ்வொரு நாளும் குறைந்தது மூன்றுபேரையாவது பாராட்டு.

மாதம் ஒரு முறையாவது சூரிய உதயத்தைப்பார்.

'நன்றி', தயவுசெய்து' இந்த வார்த்தைகளை முடிந்தவரை அதிகம் உபயோகி.

உன் வசதிக்கும் தகுதிக்கும் உட்பட்டு வாழக்கற்றுக்கொள்.

உன்னை மற்றவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறாயோ. அப்படியே நீயும் மற்றவர்களை நடத்து.

ரகசியங்களைக் காப்பாற்று. புதிய நண்பர்களைத் தேடிக்கொள். பழைய நண்பர்களை மறந்துவிடாதே.

தொழில் ரகசியங்களைக் கற்பதில் நேரத்தை வீணடிக்காமல் தொழிலைக் கற்றுக்கொள்.

உன் தவற்றை தயங்காமல் ஒத்துக்கொள். தைரியமாக இரு. உண்மையில் அவ்வாறு இருக்கமுடியாவிட்டாலும். அப்படித் தோற்றம் அளி.

ஒரு போதும் மற்றவரை ஏமாற்றாதே. கவனிக்கக்கற்றுக்கொள். சந்தர்ப்பங்கள் அமைதியாக சில நேரம் தான் வரும்.

கோபமாக இருக்கும்போது ஒரு முடிவும் எடுக்காதே. உன் தோற்றத்தில் எப்போதும் கவனம் இருக்கட்டும். மேலதிகாரிகளையோ பெரியவர்களையோ சந்திக்கச் செல்லும் போது கம்பீரத்துடனும் நம்பிக்கையுடனும் செல்.



வவுனியாவில் பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையம் அமைப்பது தொடர்பாக ஊடகவியலாளர் சிறிரங்காவின் கருத்து உண்மைக்குப் புறம்பானது – வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி சத்தியலிங்கம்.

வவுனியா மாவட்டத்தில் பொருளாதார மத்திய அபிவிருத்தி நிலையமொன்றை நிறுவுவதற்காக வடமாகாண சுகாதார அமைச்சரான சத்தியலிங்கம் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கேட்டுக்கொண்டதற்கு அமையவே இந்த பொருளாதார மத்திய மையம் அமைப்பதற்கான அனுமதி தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. இதிலும் மாறுபாடான கருத்தைத் தோற்றுவித்து குழப்பும் நடவடிக்கைகளில் பல ஊடகங்களும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றனர். அமைச்சர் ரிஷாட் பதியூதீனிடம் இவ் வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக கன்சாட் ஒப்புதல் வாக்குமூலத்தைத் தாரைவார்த்து அமைச்சர் சத்தியலிங்கம் கொடுத்துவிட்டார் என்ற கருத்தாடலானது உண்மைக்குப் புறம்பானது. இதற்கும் அமைச்சர் ரிஷாட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

வடபகுதியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அமைச்சர் என்ற வகையிலும் ரிஷாட் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார். இதில் நாம் சுயநலநோக்கத்தோடு செயற்படவேண்டியதன் தேவை இல்லை. குற்றம் கூறுபவர்கள் கூறிக்கொண்டே இருப்பார்கள். மின்னல் நிகழ்ச்சியின் ஒழுங்கமைப்பாளரான ரங்கா அவர்கள் இவ்விடயம் தொடர்பான கருத்தை முன்வைக்கின்ற பொழுது, இது தொடர்பான உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் நோக்கில் பாராளுமன்றத்தின் இரு உறுப்பினர்களும் அதனை மறுத்துப்பேசவில்லை. காரணம் அவர்களுக்கு உண்மைத்தன்மை தெரியாது.

அமைச்சர் சத்தியலிங்கம் அவர்கள் இரட்டைவேடம் செய்கின்றார் என்பதைக்கூறிய ஊடகவியலாளர் ரங்கா அவர்களுக்கு அபிவிருத்தி வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக போதிய தெளிவில்லாத தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது. எமது பிரதேசத்தில் ஒரு வர்த்தக மையம் அமையப்பெறுவதற்கும், அதனை நாம் முஸ்லீம் அமைச்சர்களுக்கு தாரைவார்த்துக் கொடுப்பதற்கும் எம்மை அவர்கள் ஒரு முட்டாள் என நினைக்கின்றார்கள். அல்லது அமைச்சர் ரிஷாட் பதியூதீன் அவர்களுக்கு சோரம் போய்விட்டதாகவே இந்த நேர்காணலில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒருசாராரை உயர்த்தி, ஒரு சாராரை தாழ்த்திப்பேசுவது என்பது ஊடகவியலாளர் ரங்கா அவர்களுக்குப் பரம்பரைத் தொழில். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அமைச்சர் ரிஷாட் பதியூதீனிடம் கன்னத்தில் அடிவாங்கிய சம்பவம் ஊடகங்களிலும், இணையத்தளங்களிலும், முகநூல்களிலும் பெரும்பரபரப்பாகவே வெளியானது. மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, நாமல், டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் கடந்த காலங்களில் கைகோர்த்து தமிழினத்தை வைத்துப் பிழைப்பு நடத்தியவர்தான் இவர்.

இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சி, ஆயுதக்கட்சிகள், வடமாகாணசபை போன்றவற்றிற்கிடையில் கருத்து முரண்பாடுகளைத் தோற்றுவித்து தமிழர் பகுதியில் ஒருவர்த்தக மையத்தை அமைப்பதற்குப் பதிலாக சிங்களவர்களுடைய பிரதேசத்தில் அமைப்பதற்கு இவ் ஊடகவியலாளரான சிறிரங்கா முற்படுகின்றார்.

அரசாங்கத்துடன் கைகோர்த்து அவர் செயற்படாதவரை அவருடைய மின்னல் நிகழ்ச்சி மக்கள் மத்தியில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. அவர் என்று தனது நரிப் புத்தியைக்காட்ட முனைந்தாரோ அன்றிலிருந்து தனது சுய அரசியலை வளர்க்கும் நோக்கில் செயற்படுகின்றாரே தவிர, வடகிழக்கில் வாழ்கின்றதமிழ்மக்கள்தொடர்பில்அக்கறை செலுத்தவில்லை என்பதை அவரது நேர்காணல் எடுத்துக்காட்டுகின்றது.

சாதாரணமாக கையாளப்படவேண்டிய இந்த வர்த்தக மையம் தொடர்பான பிரச்சினை முஸ்லீம் அமைச்சர் ஒருவருக்கு தரைவார்க்கப்படப்போகின்றது என்ற விடயத்தைக் கூறியிருந்தவர் ஊடகவியலாளர் சிறிரங்கா. இது உண்மையில் அப்பட்டமான பொய். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற வகையில் இவ் ஊடகவியலாளர் செயற்படுவது எமது தமிழ் சமுதாயத்தினை பாரதூரமான விளைவுகளுக்கு இட்டுச்செல்லும்.

எமது பிரதேசத்தில் ஒரு வர்த்தக மையம் வருவதையிட்டு நாம் பெருமை கொள்வதோடு, அதனைக்கொண்டு நாம் ஒருவரை ஒருவர் தவறாகப்பேசி அதில் குளிர்காயக்கூடாது. எமது தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன பாதுகாக்கப்படவேண்டும்.

இந்த வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் வடமாகாண முதலமைச்சர் கலந்துரையாடியதன் பின்னர் அது எங்கு அமையப்போகின்றது என்பது அறிவிக்கப்படும். அதற்கு முன் வீணான பேச்சுக்களைப்பேசி மக்களைக் குழப்பும் நடவடிக்கையில் அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும் ஈடுபடக்கூடாது. இவ் பிரச்சினை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடுசெய்தபோதே அமைச்சர் சத்தியலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.


ஊடகவியலாளர் சந்திப்பின் மறுநாள் வடமாகாணசபை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை உறுப்பினர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்களை ஒருங்கிணைத்து அமைச்சர் சந்தியலிங்கம் அவர்கள் வவுனியாவில் ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தார். அதில் முதலமைச்சர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இதற்குரிய தீர்வுகளை மேற்கொள்ளவிருப்பதாக உத்தரவாதம் வழங்கியிருந்தார். இதன் பின்னர் தான் எங்கு இந்த வர்த்தக மையத்தை அமைப்பது என்ற முடிவை வெளிப்படையாகத் தெரிவிப்போம் என்றார். அதுவரை இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களும், அரசியல்வாதிகளும் பொய்யான கருத்துக்களை வெளியிடாது செயற்படவேண்டும் என்பதே எமது விரையமான வேண்டுகோள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் உலகம்

## புதிய மைல்கல்லை எட்டியது அப்பிள் மியூசிக்



ஒன்லைனில் பாடல்களைக்கேட்டு மகிழும் வசதியினை அப்பிள் நிறுவனம் தனது பயனர்களுக்கு அளித்துவருவது தெரிந்ததே. மிகவும்பிரபல்யமான இச்சேவையானது குறுகிய காலத்தில் இமாலய வளர்ச்சியினை எட்டியுள்ளது. இந்த தகவலை அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான டிம் குக் தெரிவித்துள்ளார். இதன்படி 13 மில்லியன் சந்தாகாரர்களை (Subscribers) குறித்த சேவை எட்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இந்த வருடம் மார்ச் மாத இறுதியில் 11 மில்லியன் சந்தாகாரர்கள் இருந்துள்ளனர்.

இதேவேளை இவர்கள் அனைவரும் சந்தா கட்டணம் செலுத்துபவர்கள் என்பது சிறப்பம்சமாகும். அப்பிள் நிறுவனம் தனி பயனர் ஒருவருக்கு மாதாந்தம் 9.99 டொலர்களையும், ஒன்றிற்கு மேற்பட்ட பயனர்களுக்கு மாதாந்தம் 14.99 டொலர்களையும் அறவிடுகின்றது. இச் சேவையானது அப்பிள் நிறுவனத்தினால் கடந்த வருடம் ஜூன் மாதமே அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இது இவ்வாறிருக்கையில் Spotify மியூசிக் சேவையானது 30 மில்லியன் பயனர்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா– பாகிஸ்தான் எல்லையில் லேசர் சுவர்



இந்தியா- பாகிஸ்தான் எல்லைப் பகுதி ... பத்துக்கும் மேற்பட்ட பகுதிகளில் லேசர் சுவர்களை இந்திய ராணுவம் அமைப்பியுள்ளது. இதனால் தீவிரவாத ஊடுருவலை கட்டுக்குள் கொண்டுவர முடியும் என அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியா- பாகிஸ்தான் எல்லைப் பகுதியின் ஆற்றுப்படுகைகளில் முள் கம்பி வேலி அமைப்பது பெரிய அளவில் பலனை தராது. தண்ணீர் வரும் காலங்களில் அப்பகுதியைக் கண்காணிக்க எல்லையையொட்டி நடந்து செல்வதும் மிகவும் கடினம். எனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன் லேசர் சுவர்கள் இப்பகுதிகளில் அமைக்க அரசு முடிவு செய்தது.

இதன்படி ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாப்மாநிலங்களில் அமைந்துள்ள சில எல்லைப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு அகச்சிவப்பு மற்றும் லேசர் கற்றை சுவர்களை நிறுவும் பணிகளை எல்லை பாதுகாப்புப்படை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாப்எல்லைப்பகுதிகளில் நிறுவப்பட்ட லேசர் சுவர்கள் செயற்பாட்டுக்கு வந்துள்ளன. லேசர் சுவர்கள் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தில் செயற்படுபவை என்பதால், இவற்றின் மூலம் சர்வதேச எல்லைப் பகுதிகளில் தீவிரவாதிகள் ஊடுருவலை எளிதில் கண்காணிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தொழில்நுட்பம் மூடுபனி காலங்களிலும் வேலை செய்யும் திறனுடன் உருவாக்கப்பட்டுள்ளது.


## வட்ஸ் அப் தரவிருக்கும் அசத்தலான புதிய வசதிகள்



பேஸ்புக் நிறுவனத்தின் வட்ஸ் அப் சமீப காலமாக தன்னுடைய பயனர்களுக்கு புதிய வசதிகளை வழங்கி வருகிறது. அண்மையில் பாதுகாப்பு அம்சமான ஒருவருடைய தகவலை வேறு யாரும் ஹேக் செய்து பார்க்க முடியாத வகையில் end-to-end encryption ஒப்சனை கொண்டு வந்தது. இதைத்தொடர்ந்து பல்வேறு வசதிகளை வழங்கவுள்ளது. அன்ட்ரொய்ட் மற்றும் ஐஓஎஸ்இல் (IOS) கோல் பேக் (call back) ஒப்சன் கொண்டுவரவுள்ளது. இதன் மூலம் வட்ஸ் அப் செல்லாமலே மொபைல் போனில் இருந்து கோல் செய்யலாம். அதே போல் வொய்ஸ் மெய்ல் (voicemail). ஜிப் பைல் சேரிங் ஒப்சனை கொண்டுவரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும். அனுப்பிய மற்றும் பெறப்பட்ட பிடீஎப் பைல்களான Docs. Sheets மற்றும் Slides files உள்ளிட்டவற்றை ஜிப் பைலாக மாற்றி அனுப்பும் வசதியையும் கொடுக்கவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## HTC அறிமுகம் செய்யும் மற்றுமொரு புதிய கைப்பேசி



கைப்பேசி வடிவமைப்பில் அப்பிள் மற்றும் சம்சுங் நிறுவனங்களுக்கு நிகர் போட்டியாக பார்க்கப்படும் நிறுவனம் HTC ஆகும். கைப்பேசி சந்தையில் சிறந்த கேள்வியையும் கொண்டுள்ள இந்நிறுவனம் குறிப்பிட்ட கால இடைவெளியில் புதிய ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்து வருகின்றது. இதன் தொடர்ச்சியாக தற்போது மற்றுமொரு புதிய கைப்பேசி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. HTC One S9 எனும் இக்கைப்பேசியானது 5 அங்குல அளவு. 1920 x 1080 Pixel Resolution உடையதுமான Full HD தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

இத்திரையானது LCD தொழில்நுட்பத்தினைக் கொண்டிருப்பது விசேட அம்சமாகும். இது தவிர பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. சேமிப்பு நினைவகத்தினை microSD கார்ட்டின் ஊடாக அதிகரிக்கும் வசதியும் தரப்பட்டுள்ளது. மேலும் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கெமரா. 4 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கெமரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. கூகுளின் Android Marshmallow இயங்குதளத்தினைக் கொண்டுள்ள இக் கைப்பேசியின் விலையானது 499 யூரோக்களாகும்.

## ஹேம் பிரியர்களை குஷிப்படுத்தும் Angry Birds Action



கணனி கேம்கள் என்றால் பொதுவாக சிறுவர்களே அதிகளவில் ஆர்வமாக இருப்பார்கள். ஆனால் இவர்களையும் தாண்டி வயது வேறுபாடின்றி அனைவரையும் கவரக்கூடிய கணனி கேம்களும் அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன. அப்படியான ஒரு ஹேமே Angry Birds ஆகும். சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட இக் ஹேமானது பட்டி தொட்டி எங்கும் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. இதன் காரணமாக தொடர்ச்சியாக பல பதிப்புக்கள் வெளியிடப்பட்டு வந்தது.

இவ்வாறான நிலையில் Angry Birds Action எனும் மற்றுமொரு பதிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் மே மாதம் Angry Birds தொடர்பான திரைப்படம் ஒன்று வெளியாகவுள்ள நிலையில் இப்புதிய பதிப்பு அறிமுகம் செய்யப்பட்டமை முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இப் புதிய பதிப்பினை Android மற்றும் iOS சாதனங்களில் தரவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

## 100 கிராம் எடையுடன் சந்தைக்கு வரும் சோலர் Power Bank



சூரிய சக்தியில் இயங்கும் Solar Power Bankயை அய்வார்ஸ் வெம்பிரிஸ் என்பவர் கண்டுபிடித்து அசத்தியுள்ளார். திடநிலை இயற்பியல் துறையில் 14 ஆண்டுகள் அனுபவம் கொண்ட இவர். காப்பர் இண்டியம் கால்லியம் செலனைட் சோலர் பேனலை தன்னுடைய தயாரிப்புக்குப் பயன்படுத்தியுள்ளார். இதன் சிறப்பம்சம் இதன் எடை தான். இதன் எடை 100 கிராம் மட்டுமே உள்ளது ஆச்சரியம் அளிக்கும் விடயம் ஆகும். சந்தையில் 'Power Bank'கள் கிடைத்தாலும் இந்த அளவு குறைந்த எடைக்கு இல்லை.

இந்த சக்தி வங்கியை மடக்கியும் பயன்படுத்திக் கொள்ளலாம். சிறிய சாதனங்களான ஸ்மார்ட் போன். கெமரா. MP3 பிளேயர் ஆகியவற்றிக்கு இதைப் பயன்படுத்தலாம். GoSolar என பெயரிடப்பட்ட இந்த தயாரிப்புக்கு நிதியும் திரட்டப்பட்டு வருகிறது. நவம்பர் மாதம் முதல் சந்தைக்கு வரவிருக்கும் இதன் விலை 140 டொலர்கள் ஆகும்.


## மனிதர்களுக்கு உள்ளே காணப்படும் உயிரியல் கடவுச்சொல்



கணனி. மொபைல் சாதனங்களை பாதுகாப்பதற்கும். இணையத்தளங்களில் பல்வேறு கணக்குகளை கொண்டிருப்பவர்களும் அவசியம் கடவுச்சொற்களை (Password) கொண்டிருப்பார்கள். அனேகமாக கடவுச்சொற்கள் ஆங்கில எழுத்துக்கள். விசேட குறியீடுகள். இலக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கும். எனினும் இவ்வாறான கடவுச்சொற்கள் போதியளவு பாதுகாப்பானதாக இருப்பதில்லை. இதனால் பெருமளவிலான கணக்குகள் ஹேக்கர்களின் தாக்குதல்களுக்கு இலக்காவதுண்டு. இப்பிரச்சினைக்கு தீர்வாக சமீபகாலமாக கைவிரல் அடையாளத்தினை (Finger Print) கடவுச்சொல்லாக பயன்படுத்தக்கூடிய வசதி கூடுதலான இலத்திரனியல் சாதனங்களில் காணப்படுகின்றது. இத்தொழில்நுட்பமானது தனித்துவம் வாய்ந்ததாகவும், அதிக பாதுகாப்பு மிக்கதாகவும் காணப்படுகின்றது.

இவ்வாறிருக்கையில் கைவிரல் அடையாளம் மட்டுமல்ல மனிதர்களின் மண்டையோட்டிலிருந்து எழுப்பப்படும் ஒலியினையும் கடவுச்சொல்லாக பயன்படுத்த முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மண்டையோட்டு ஒலியானது கைவிரல் அடையாளம் போன்றே ஒவ்வொருவருக்கும் தனித்துவம் வாய்ந்தாக இருப்பதாக இம்முறையை கண்டுபிடித்த ஜேர்மன் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இவர்கள் 10 நபர்களைக்கொண்டு மேற்கொண்ட ஆய்வில் 97 சதவீதம் சரியான செயற்பாட்டினைக் காட்டுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கூடிய சேமிப்பு கொள்ளளவினைக்கொண்ட SSD கார்ட் அறிமுகம்



தரவுகளை நிரந்தரமாகவும். அதிகளவிலும் சேமிப்பதற்கு துணைச்சேமிப்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிற்கிடையிலான ஒப்பீட்டில் வன்றட்டுக்களிலே (Hard Disk) அதிக தரவுகள் சேமிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும் வன்றட்டுக்களுக்கு பதிலாக SSD கார்ட்கள் பயன்படுத்தப்படுவது தற்போது அதிகரித்து வருகின்றது. வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் SSD கார்ட்கள் விரைவாக தரவுகளை கடத்தக்கூடியதாக இருப்பதுடன். லேப்டொப் போன்ற கணினிகளில் மின்கலங்களின் நீண்ட நேரச் செயற்பாட்டிற்கு உத்தரவாதம் உடையதாக காணப்படுகின்றது. ஆனாலும் SSD கார்ட்கள் வன்றட்டுக்களுடன் ஒப்பிடுகையில் விலை அதிகமாகும். இதனால் குறைந்த சேமிப்பு கொள்ளளவினை உடைய SSD கார்ட்களே இதுவரை உருவாக்கப்பட்டு வந்தது. ஆனால் முதன் முறையாக Crucial MX300 எனும் 750GB சேமிப்பு கொள்ளளவு உடைய SSD கார்ட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது தரவுகளை 530 MB/s எனும் வேகத்தில் வாசிக்கக்கூடியதாகவும், 510 MB/s வேகத்தில் பதியக்கூடியதாகவும் இருக்கின்றது. இதன் விலையானது 208 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

---

...ன் 4ம் லூயினுடைய மூழ்கிய கப்பலில் இருந்து. குவளை ஒன்றை OceanOne என்ற மனித வடிவிலான நீர்மூழ்கி ரோபோ ஒன்று மீட்டு வந்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. Artificially intelligent humanoid robot என்ற செயற்கை அறிவால் செயற்படுகிற. கடற்கன்னி என்ற ரோபோ மத்திய தரைக்கடல் பகுதியில் மனிதர்களால் செல்ல முடியாத ஆழத்தில் இருந்த ...ன் 14ம் லூயினுடைய மூழ்கிய கப்பலில் இருந்த குவளையை மீட்டுள்ளது. [illegible] என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த ரோபோ ஸ்டான்போர்ட் [illegible] கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்கள். செங்கடலில் மனிதர்கள் செல்ல முடியாத ஆழத்தில் உள்ள பவளப்பாறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அதனை வடிவமைத்துள்ளனர். அதில். மனிதனை போல பார்க்கும் திறனும். செயற்கை மூளையும் பொருத்தப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## அப்ரிடியின் மோசமான நடவடிக்கையே காரணம் - யூனிஸ்



கடந்த 2 ஆண்டு கால தனது பயிற்சியாளர்பதவியின்போதுபாகிஸ்தான் அணி வீரர்களின் செயற்பாடுகள் குறித்து வக்கார் யூனிஸ் அந்த நாட்டு கிரிக்கெட் வாரியத்துக்கு அறிக்கை அளித்து இருக்கிறார். அந்த அறிக்கையில் இடம் பெற்று இருக்கும் சில தகவல்கள். 20 ஓவர் உலகக்கிண்ணம் மற்றும் 20 ஓவர் ஆசிய கிண்ணப்போட்டி, இங்கிலாந்து-நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் போட்டி தொடர்களில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்கு அணித்தலைவர் பதவியில் அப்ரிடி சரியாக செயற்படாததே காரணமாகும்.பல ஆட்டங்களில் அவர் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சொதப்பியதுடன், அணித்தலைவர் பொறுப்பிலும் சரியான முறையில் செயற்படவில்லை. அவரது மோசமான ஆட்ட வியூகம் அணியின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

. நியூசிலாந்துக்கு எதிரான போட்டி தொடர் தோல்விக்குப்பிறகு வீரர்கள் கூட்டத்தில் ஆலோசனை நடத்திய போது அணித்தலைவர் சொன்ன பல ஆலோசனைகள் தங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியதாக வீரர்கள் புகார் தெரிவித்தனர். அப்ரிடி, அணி வீரர்களின் ஆலோசனை கூட்டங்கள் சிலவற்றில் கலந்துகொள்ளவில்லை. சில நேரங்களில் பயிற்சியில் பங்கேற்காமலும் தவிர்த்தார். அணித்தலைவர் என்பவர் அணியின்முன்மாதிரியாகதிகழவேண்டும். ஆனால் இதுபோன்று மோசமாக நடந்து கொள்ளக்கூடாது. உமர் அக்மல், அகமது ஷெசாத், அப்ரிடி ஆகியோர் அணியில் யார் பெரியவர்? என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகிறார்கள். இந்த எண்ணம் அணியில் உருவாகாமல் தடுக்கும் வகையில் அவர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தகுந்த அறிவுரை வழங்கவேண்டும்.

இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடருக்கு உடல் தகுதி தேர்வுக்கு ஆஜராகுமாறு உமர் அக்மலை முன்னாள் தேர்வு குழு தலைவர் ஹாரூன் ரஷீத் அறிவுறுத்தி இருந்தார். ஆனால் அவர் யாரிடமும் சொல்லாமல் இலங்கை போட்டித் தொடரை தவிர்த்து கரீபியன் லீக் போட்டியில் கலந்துகொண்டார். சில மாதங்களுக்கு பிறகு அவர் ஐதராபாத் சர்ச்சையில் (உள்ளூர் லீக் போட்டியில் விளையாடுகையில் பெண்ணிடம் தவறாக நடந்துகொண்டதாக புகார்) சிக்கினார். இருப்பினும் அவருக்கு மீண்டும் அணியில் இடம் கிடைத்தது. இதன் மூலம் எந்த தகுதியின் அடிப்படையில் வீரர்கள் அணிக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது கேள்விக்குறியாகி இருக்கிறது என கூறியுள்ளார்.

## மலிங்காவுக்கு ஓய்வு - இலங்கை கிரிக்கெட் வாரியம் முடிவு



இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மலிங்கா, காலில் ஏற்பட்டுள்ள குணமடையாத காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். டி20 உலகக்கிண்ண தொடரில் இந்த காயத்தால் தலைவர் பதவியில் இருந்து விலகிய மலிங்கா, தொடரில் இருந்தும் விலகினார். இதனால் இலங்கை அணி அந்த தொடரில் மோசமான தோல்வியை சந்தித்தது.

இந்நிலையில் ஐபிஎல் போட்டிகளில் பங்கேற்க முடிவு செய்த மலிங்காவால் அந்த தொடரிலும் பங்கேற்க முடியவில்லை. இதனால் அவர் நாடு திரும்பினார். இலங்கை அணி அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் ஒரு டி20 போட்டியில் விளையாடுகிறது. இந்த தொடருக்கான இலங்கை அணியில் மலிங்கா இடம்பெறவில்லை. இந்த நிலையில் மலிங்காவுக்கு 3 மாத கால ஓய்வு வழங்க கிரிக்கெட் வாரியம் தீர்மானித்துள்ளது.

## உலக சாதனையை சமன் செய்த இந்திய வீராங்கனை

இந்தியா வில்வித்தை விளையாட்டு வீராங்கனை தீபிகா குமாரி, உலக சாதனையை சமன் செய்து இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார். சீனாவின் ஷாங்காயில்நடைபெற்று வரும் வில்வித்தை உலகக்கிண்ணத் தொடரின் தகுதிச்சுற்றில் பங்கேற்று விளையாடிய 21 வயதான தீபிகா குமாரி, மொத்தம் 720 புள்ளிகளுக்கு 686 புள்ளிகள் பெற்றார்.

இதன் மூலம், கடந்த ஆண்டு குவங்ஜூ உலக பல்கலைக்கழகம் விளையாட்டுப் போட்டிகளின் போது தென் கொரியா வீராங்கனை கி போ பே நிகழ்த்திய உலக சாதனையை சமன் செய்துள்ளார். போட்டியின் இடைவெளியின்போது, உலக சாதனையை முறியடிக்க தீபிகா குமாரிக்கு 343 புள்ளிகள் தேவைப்பட்டிருந்தது. ஆனால், போட்டியின் முடிவில் தீபிகா குமாரி 342 புள்ளிகள் பெற்று உலக சாதனையை சமன் செய்து இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு போலந்து நாட்டில் நடந்த உலகக்கிண்ண வில்வித்தை போட்டியில் தீபிகா குமாரி தலைமையிலான இந்தியா பெண்கள் வில்வித்தை அணி தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## டிவில்லியர்ஸ் மனைவியுடன் மேடையில் அசத்திய ஷேன் வொட்சன்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான ஷேன் வொட்சன் போட்டிகளின் போது முக்கியமான நேரத்தில் களமிறங்கி அசத்துவார் என்பது அனைவருக்கும் தெரியும். அதேசமயம் அவ்வப்போது கிடைக்கும் மேடைகளிலும் அவர் கிட்டாரில் பாட்டுப்பாடி அசத்தி வருகிறார். கடந்த 2014ம் ஆண்டு அபுதாபியில் நடந்த ஐபிஎல் தொடக்க விழாவில் ரசிகர்கள் முன்னிலையில் தோன்றிய அவர் மேடையில் பாட்டுப்பாடி அசத்தினார்.

இந்நிலையில் தற்போது நடந்து வரும் ஐபிஎல் தொடரில் பெங்களூர் அணியில் விளையாடி வரும் வொட்சன் மேடையில் பிரபல ஆங்கிலப் பாடல் ஒன்றைபாடினார். அவருடன் டிவில்லியர்சின் மனைவியும் இணைந்துகொண்டு அந்த பாடலைப் பாடி அசத்தினார். இந்த வீடியோவை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள டிவில்லியர்ஸ், "குட்டி டிவில்லியர்ஸ் தனது அம்மாவின் மேடை பங்கேற்பை முதல்முறை பார்க்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## 9வது முறையாக சம்பியன் பட்டம் வென்றார் ரபெல் நடால்



பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் சம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். ஸ்பெயினில் நடந்த பார்சிலோனா ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில், 14 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால்-நடப்பு சாம்பியனான நிஷிகோரி (ஜப்பான்) மோதினர். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி வந்த ரபெல் நடால் 6-4, 7-5 என்ற நேர்செட்டில் நிஷிகோரியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். ரபெல் நடால் இந்தப் பட்டத்தை 9வது முறையாக வென்றுள்ளார்.

மேலும், களிமண் தரையில் நடந்த போட்டியில் ரபெல் நடால் வென்ற 49வது பட்டம் இதுவாகும். இதன் மூலம் களிமண் தரையில் அதிக பட்டம் வென்ற ஆர்ஜென்டினாவை சேர்ந்த குல்லெர்மோ விலாஸ்சின் சாதனையை அவர் சமன் செய்துள்ளார்.

## பாகிஸ்தான் நாட்டின் குடிமகனாகும் டேரன் சமி



மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமிக்கு கௌரவக் குடியுரிமை வழங்க பாகிஸ்தான் அரசு முன் வந்துள்ளது. மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 2 முறை டி20 உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த டேரன் சமி, பாகிஸ்தான் உள்ளூர் அணியான பெஷாவர் ஜால்மி அணிக்காக விளையாடி வருகிறார். இந்நிலையில் பாகிஸ்தான் ரசிகர்களிடையே மிகவும் பிரபலமான வீரராக உள்ள சமிக்கு கௌரவக் குடியுரிமை வழங்கவேண்டும் என்று பெஷாவர் அணியின் உரிமையாளர் ஜாவேத் அப்ரிடி டுவிட்டர் மூலம் கோரிக்கை விடுத்தார். இதற்கு பதில் அளித்த பாகிஸ்தான் கைபர் பதுன்க்வா மாகாண முதலமைச்சர் பெர்வெய்ஸ் கட்டாக், டேரன் சமிக்கு கௌரவ குடியுரிமை வழங்குவதில் பெருமை கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.



செர்பியாவைச் சேர்ந்த முன்னாள் டென்னிஸ் விளையாட்டு வீரர் ஒருவர் தனக்கும், இளவரசி டயானாவுக்கும் இடையே உறவு இருந்ததாக தெரிவித்துள்ளார். Slobodan Živojinović என்ற 52 வயதான செர்பியாவைச் சேர்ந்த முன்னாள் டென்னிஸ் விளையாட்டு வீரர் தெரிவித்துள்ள இந்த விடயம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், இளவரசர் சார்ல்ஸுடன் டயானாவுக்கு திருமணமான பின்னரும், இந்த உறவு இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். செர்பிய நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், 1980களின் இறுதியில், நான் விம்பிள்டனில் விளையாடியபோது அவர் எனது ஆட்டத்தைப் பார்த்து ரசித்தார். இதன் பின்னரே நாங்கள் இருவரும் மிக நெருங்கி பழக தொடங்கினோம். டயானா எனது டென்னிஸ் ஆட்டத்தை வி.ஐ.பிக்கான இடத்தில் அமர்ந்து பார்க்கமாட்டார். விஐபி இருக்கையில் அமர்ந்து பார்த்தால் நான் தொலைவில் தெரிவேன் என்ற காரணத்தால், அவர் டென்னிஸ் கோர்ட் அருகே உள்ள சாதாரண இருக்கையில் அமர்ந்து என் ஆட்டத்தை ரசித்தார்.

1987ம் ஆண்டு நடந்த விம்பிள்டன் போட்டிக்கு முன்னதாக அவர் என்னுடன் பேசினார். அவர் ஒரு அற்புதமான பெண். அவருடன் நான் எதைப்பற்றி வேண்டுமானாலும் பேச முடிந்தது. சாதாரண எளிய விடயங்களை அவரிடம் பேசினாலும் அதில் சுவாரஸ்யம் நிறைந்திருக்கும். அவர் தற்போது நம்முடன் இல்லாத காரணத்தால் நான் அவரைப்பற்றி விரிவாக பேச விரும்பவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ரூ.60 கோடிக்கு விமானம் வாங்கினார் நெய்மர்

பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் ரூ.60 கோடிக்கு சொகுசு விமானம் ஒன்றை வாங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. நெய்மர் கடந்த 2011ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை சுமார் 16 மில்லியன் பவுண்ட்கள் வரை வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் சா பாலோ நகர நீதிமன்றம் நெய்மரின் ரூ.310 கோடி மதிப்புள்ள சொத்துக்களை முடக்க உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் அவர் செஸ்னா 680 ரக விமானத்தை பிர் பார்டிசிபகோயஸ் என்ற நிறுவனத்தின் மூலம் அடமானமாக இவ்வளவு பெரிய தொகைக்கு வாங்கியுள்ளதாக பிரபல செய்தித்தாள் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 12 பேர் வரை பயணம் செய்யக்கூடிய இந்த செஸ்னா 680 ரக விமானம் நடுத்தர வணிக ஜெட் வகையைச் சேர்ந்தது.



நடன அழகிகளை மீண்டும் ஆட சொல்லி தொல்லை கொடுத்த பாகிஸ்தான் வீரர்கள் உமர் அக்மல், பிலாவால் ஆகியோருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் டி20 உலகக்கிண்ணப் போட்டியில் ஆடிய உமர் அக்மல், கடந்த ஆண்டு ஐதராபாத்தில் நடன நிகழ்ச்சியில் பங்கேற்று பொலிசில் சிக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகச் செய்திகள்





## அகதிகள் முகாமில் தீக்குளித்து உயிரிழந்த புலம்பெயர்ந்தவர்



அவுஸ்திரேலியா நாட்டிற்கு அருகில் உள்ள அகதிகள் முகாமில் புலம்பெயர்ந்த வாலிபர் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவுஸ்திரேலியா நாட்டில் புகலிடம் கோரி வரும் புலம்பெயர்ந்தவர்களை அருகில் உள்ள Nauru என்ற தீவுப்பகுதியில் அரசாங்கம் தங்க வைத்துள்ளது. அங்குள்ள அகதிகள் முகாமில் ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளதுடன் இங்கு அடிக்கடி தகராறும் ஏற்பட்டு வந்துள்ளது. இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் அகதிகள் முகாமில் தங்கியிருந்த [illegible] வயதான வாலிபர் ஒருவர் தீக்குளித்து பாரதூரமான காயங்களுடன் உயிருக்கு போராடியுள்ளார். உடனடியாக ஹெலிகொப்டர் வரவழைக்கப்பட்டு அவரை பிரிஸ்பேன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால், தீக்காயங்கள் ஆழமானதாக இருந்ததால், அந்த வாலிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பொலிசார் நடத்திய விசாரணையில் வாலிபரின் பெயர் Omid எனத் தெரியவந்துள்ளது. எனினும், அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்ற தகவலை பொலிசார் வெளியிடவில்லை. மேலும், பல்வேறு அரசியல் சார்ந்த காரணங்களாலும், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்கிலும் அவர் தீக்குளித்துள்ளதாக தெரியவந்திருந்தாலும், இதுவரை உறுதியான காரணங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அகதிகள் முகாமில் புலம்பெயர்ந்தவர் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்துள்ள சம்பவத்தை தொடர்ந்து, வாலிபரின் குடும்பத்தினருக்கு உரிய வசதிகளை செய்து தந்துள்ளதாக அந்நாட்டு குடியமர்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயங்கள் கண்டெடுப்பு



தெற்கு ஸ்பெயினில் உள்ள Seville நகரில், கட்டுமான தொழிலாளர்கள் கட்டுமான பணியில் ஈடுபட்டபோது சுமார் 600 கிலோ எடையுள்ள பண்டைய ரோமானிய நாணயங்களை கண்டெடுத்துள்ளனர். Seville நகர தொல்லியல் அருங்காட்சியகத் தலைவர் Ana Navarro அதனை ஆராய்ந்து கூறுகையில், இது ஒரு தனிப்பட்ட தொகுப்பு. இதுபோல் சில சமயங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. 3ம் நூற்றாண்டின் கடைசி, அல்லது 4ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தை சேர்ந்த இந்த வெண்கல நாணயங்கள், Roman amphoras எனப்படும் 19 ஜாடிகளில் கிடைத்துள்ளது. இந்த நாணயங்களின் மதிப்பு, நிச்சயமாக பல மில்லியன் யூரோக்களாக இருக்கும். ரோமானிய பேரசரர்கள் மேக்ஸிமியன் மற்றும் கான்ஸ்டண்டைன் ஆகியோரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ள அந்த நாணயங்கள், கரைகள் எதுவும் இல்லாமல் இருப்பதால் அதிகளவில் புழக்கத்தில் ஈடுபடுத்தப்படாதவை என்பது தெரியவருகிறது. அவை ராணுவம், அரசு ஊழியர்கள் போன்றோருக்கு செலுத்துவதற்காக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம். அவைகளில் பெரும்பாலான நாணயங்கள், புதிதாக செய்யப்பட்டதாக உள்ளது.

மேலும், வெண்கலத்தில் மட்டுமல்லாது வெள்ளியும் சேர்த்து செய்யப்பட்டுள்ளது. இந்த நாணயங்களுக்கான பொருளாதார மதிப்பை கொடுக்க முடியாது. ஏனெனில் இந்த நாணயங்கள் வரலாற்று சிறப்புக் கொண்டவை. அதனை நாம் மதிப்பிடுவது இயலாத காரியம் ஆகும் என தெரிவித்துள்ளார். தற்போது உள்ளூர் அதிகாரிகள் அந்த இடத்தில் நடந்து வந்த கட்டுமான வேலைகளை தடை செய்துள்ளனர். மேலும், அந்த தளத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள திட்டமிட்டு வருகின்றனர்.

## வெனிசுவெலாவில் வாரத்தில் 5 நாள் அரசு விடுமுறை




வெனிசுவெலாவில் நிலவும் மின்சாரத் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்த அலுவலகங்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் விடுமுறை அளித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. வெனிசுவெலா நாட்டுக்குத் தேவையான பெரும்பாலான மின்சாரம் எல் குரி அணையில் இருந்தே பெறப்படுகிறது. தற்போது அணையில் தண்ணீரின் அளவு குறைவாக உள்ளதால் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த முதற்கட்டமாக வெள்ளிக்கிழமை தோறும் அலுவலகங்களுக்கு விடுமுறை அளித்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டிருந்தது. தற்போது இந்த விடுமுறையை மேலும் 2 நாட்களுக்கு நீட்டித்துள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அந்நாட்டு ஜனாதிபதி நிக்கொலஸ் மதுரோ வெளியிட்டுள்ளார்.

வரும் வாரங்கள் மிகவும் கடினமானதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வெனிசுவெலாவில் தற்போது 2.6 மில்லியன் அரசு ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வேலை செய்யும் இரண்டு நாட்களுக்கு மட்டும் ஊதியம் வழங்கப்படுமா அல்லது விடுமுறை விடப்பட்டுள்ள நாட்களுக்கும் ஊதியம் வழங்கப்படுமா என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை.


## பத்திரிகையாளர்களுக்கு சிறைத்தண்டனை



'சார்லி ஹெப்டோ' பத்திரிகையில் வெளியான, முகம்மது நபி பற்றிய கேலிச் சித்திரத்தை தங்கள் பத்திரிகையில் பிரசுரித்த 2 பத்திரிகையாளர்களுக்கு துருக்கிய நீதிமன்றம் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளது. Cumhuri yet daily என்ற துருக்கிய பத்திரிகையில் கட்டுரையாளர்களாக பணிபுரிந்துவரும், Ceyda Karan and Hikmet Cetinkaya இருவரும் கடந்த வருடம் எழுதிய கட்டுரை ஒன்றில், பிரான்ஸின் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகையில் வெளியான, முகம்மது பற்றிய கேலிச் சித்திரத்தை மறு பிரசுரம் செய்துள்ளனர். இது பெரும் சர்ச்சையை எழுப்பியதை அடுத்து, துருக்கி பொலிசார் அந்த பத்திரிகையின் வாகனங்களை தடுத்து நிறுத்தி அந்த பிரதிகளை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் போராட்டக்காரர்கள் பலர் அந்த கேலிச் சித்திரத்தை பிரசுரித்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அந்த பத்திரிகை பிரதிகளை தீயிட்டு கொளுத்தியுள்ளனர். பத்திரிகை வழியாக மக்கள் மத்தியில் வெறுப்பையும் பகையும் வளர்ப்பதாக அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு இஸ்தான்புல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இது தொடர்பான வழக்கு விசாரணை முடிவுக்கு வந்த நிலையில், அவர்கள் இருவருக்கும் தனித்தனியே 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாக அந்த பத்திரிகையாளர்களின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த தண்டனைபற்றிகருத்துதெரிவித்தபலரும், இது பத்திரிகை சுதந்திரத்தை அடக்கும் செயல் என்று குறிப்பிட்டுள்ளனர்.

## பிரித்தானியர்கள் இருவருக்கு மரண தண்டனை



இந்தோனேசியாவில் பிரித்தானியர்கள் இருவருக்கு போதைப்பொருள் கடத்திய விவகாரத்தில் இன்னும் சில வாரங்களில் மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது. இந்தோனேசியாவில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், போதைப்பொருள் கடத்திய விவகாரத்தில் பாலி தீவில், மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 8 பேருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டது. இந்தசம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதால் பலரும் இதற்கு கண்டனம் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. அந்த சம்பவத்தை அடுத்து இதுவரை யாருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில், வரும் வாரங்களில், மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என்றும் முதலில் 2 பிரித்தானியர்களும் உள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. பிரித்தானியாவின் Teeside பகுதியைச் சேர்ந்த Lindsay Sandiford என்பவரும், Yorkshire பகுதியைச் சேர்ந்த Gareth Cashmore என்ற இருவரும் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். ஆனாலும், யார் யாருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட உள்ளது, அது எந்த திகதியில் நிறைவேற்றப்படும் என்ற தகவல்கள் எதுவும் இதுவரை அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை. இந்தோனேசியாவில் மரண தண்டனை துப்பாக்கியால் சுட்டுத்தான் நிறைவேற்றப்படும். இதுபற்றி அதிகாரிகள் கூறுகையில், குற்றவாளிகளுக்கு சில வாய்ப்புகள் வழங்கப்படும். அதாவது குற்றவாளிகள் மரண தண்டனையை ஏற்கும்போது, நிற்கவோ, முழங்காலிடவோ, உட்கார்ந்து கொள்ளவோ தாங்களே தெரிவு செய்து கொள்ளலாம்.

மேலும் அவர்கள் கண்கள் கட்டப்பட்டு விடும். கைகளும், கால்களும் கூட கட்டப்பட்டுவிடும். அதன் பின்னரே துப்பாக்கி ஏந்திய அதிகாரிகள் மரண தண்டனையை நிறைவேற்றுவார்கள் எனத் தெரிவித்துள்ளனர். அம்னெஸ்டி இண்டர்நேசனல் நிறுவனம் அளித்த தகவலில், இந்தோனேசியாவில் கடந்த 1999ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை 27 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது. இதில், 2009ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டுகளில் யாருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஏப்ரல் 2015ம் ஆண்டு கணக்குப்படி, 121 பேர் மரண தண்டனை பெற்றவர்கள் பட்டியலில் உள்ளதாகவும், அவர்களில் 54 பேர் போதைப்பொருள் வழக்குகளிலும், இருவர் தீவிரவாதம் தொடர்பான வழக்குகளிலும், 65 பேர் கொலை வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## மல்லையாவை திருப்பி அனுப்பவேண்டும் – பிரித்தானியாவுக்கு இந்தியா

வங்கிக்கடன் மோசடி வழக்கில் சிக்கி, பிரித்தானியாவில் தலைமறைவாக உள்ள பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பவேண்டும் என்று இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் கடிதம் எழுதியுள்ளது. பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா மீது, இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பெற்று அதனை திரும்ப செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, கடன் வழங்கிய வங்கிகள் இணைந்து, உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தன. அதில், விஜய் மல்லையா வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லாமல் இருப்பதற்காக அவரது பாஸ்போர்ட்டை பறிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்குநீதிமன்றத்தில் நடந்தபோது, கடந்த மார்ச் மாதம் 2ஆம் திகதி விஜய் மல்லையா லண்டனுக்குத் தப்பிச் சென்றுவிட்டார் என சி.பி.ஐ. தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, விஜய் மல்லையாவுக்கு பிணையில் வெளிவர முடியாத பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், விஜய் மல்லையா நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதைத் தொடர்ந்து, விஜய் மல்லையாவின் பாஸ்போர்ட்டை முடக்குமாறு வெளிவிவகாரத்துறை அமைச்சகத்துக்கு, அமலாக்கத்துறை கோரிக்கை விடுத்தது. இந்த கோரிக்கையை ஏற்று விஜய் மல்லையாவின் பாஸ்போர்ட்டை மத்திய அரசு தற்போது முடக்கியது. மேலும், அவரை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒருகட்டமாக விஜய் மல்லையாவை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பவேண்டும் என பிரித்தானிய அரசுக்கு இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் கடிதம் எழுதியுள்ளது.

அந்தக் கடிதத்தில், 'லண்டனில் இருந்து விஜய் மல்லையாவை இந்தியா அனுப்பவேண்டும். வங்கிகளிடம் கடன் பெற்று திருப்பி செலுத்தாதது தொடர்பான வழக்குகள் விஜய்மல்லையா மீது தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகளுக்காக, அவர் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும்' என இந்தியா வலியுறுத்தியுள்ளது. தற்போது பிரித்தானியாவில் உள்ள மல்லையா, அந்நாட்டு குடிமகனாவே மாறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சூழ்நிலையில், இந்தியாவின் இந்தக் கடிதத்திற்கு பிரித்தானியாவின் பதில் என்னவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை உலகம்

## 4500 ஆண்டுகள் பழமைவாய்ந்த பெண் மம்மி கண்டுபிடிப்பு

அமெரிக்க கண்டத்திலேயே, பெருநாட்டில் உள்ள காரல் நகரம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இந்நகரத்தில் உள்ள கடலோர கிராமம் ஒன்றில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் 4 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முந்தைய பெண் மம்மி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 40லிருந்து 50 வயது மதிக்கத்தக்க இந்த சடலம், விலங்குகள் உட்பட பல்வேறு பொருட்களுடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், தன் சமூகத்தில் மிகச்சிறந்த அந்தஸ்தில் இந்த பெண் வாழ்ந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மம்மி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதன் மூலம் மிகவும் தொன்மையான காரல் நாகரிகம் குறித்து மேலும் தகவல்களை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.





## நாசா வெளியிட்ட பூமிக்கிரகத்தின் அழகான படங்கள்



## அருவிகளின் நாயகன் நயாகரா நீர்வீழ்ச்சி

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்துக்கும், ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்துக்கும் இடைப்பட்ட பகுதியை தன் எல்லையாகக் கொண்டிருக்கிறது நயாகரா நீர்விழ்ச்சி. 56 கி.மீ நீளமுள்ள நயாகரா ஆற்றின் நடுப்பகுதியில் இந்த நயாகரா அருவி இரண்டு பெரும் பிரிவாக அமைந்துள்ளது. இதில் ஒன்று ஆற்றின் 85 சதவீத நீர் விழும் குதிரை லாட அருவி. இது கனடாவில் உள்ளது. மற்றொன்று, மீதமுள்ள நீர் விழும் அமெரிக்க பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியாகும். இவை இரண்டையும் அல்லாமல் சிறிய பிரைடல் வெய்ல் அருவியும் சேர்ந்ததே நயாகரா பேரருவியின் ஆதிக்கம். குதிரை லாட அருவி 792 மீ அகலமும் 53 மீ உயரமும் கொண்டது. அமெரிக்கன் அருவி 305 மீ அகலமும் 55 மீ உயரமும் கொண்டது. இவைகளில் நிமிடத்திற்கு 6 மில்லியன் கன அடிக்கும் அதிகமான நீர் பாய்கிறது. அழகிய சுற்றுலாத்தலமாக மட்டுமல்லாமல், மின் உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பெரிய நீர் மூலதனமாகப் பயன்படுகிறது.

இந்த அருவியில் அமைக்கப்பட்டுள்ள ராபர்ட் மோசஸ், ஆடம்பெக் மின்நிலையங்களின் மூலம் 4 கோடி கிலோவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள ஐம்பெரும் நன்னீர் ஏரிகளில் மூன்று ஏரிகளிலிருந்து பாய்கிற நீரானது சிறிய ஈரி ஏரி வழியாக அதற்கு கீழ் நிலப்பகுதியில் உள்ள ஒண்டாரியோ ஏரியில் விழுகிறது. இப்படி பயணிக்கும் நீரின் பெயரே நயாகரா ஆறு. குதிரை லாட நீர்விழ்ச்சி 53 மீட்டர் உயரத்திலிருந்து விழுகிறது. அமெரிக்க நீர்விழ்ச்சியின் உயரம் அதன் கீழ் இருக்கும் கற்பாறைகளால் 10 – 20 மீ வரை வேறுபடுகிறது. உலகில் நயாகரா அருவியை விட ஐநூறுக்கும் மேலான அருவிகள் உயரமானவை. வெனிசுலாவில் உள்ள தேவதை அருவியே 979 மீட்டரில் உலகின் உயரமான அருவியாக உள்ளது. ஆனால், நயாகராவின் உயரமும் கொள்ளளவும் இட அமைப்பும் சேர்ந்து பெற்றிருக்கும் பெரும் புகழுக்கு வேறருவிகள் ஈடில்லை. படகு மூலம் மூன்று அருவிகளையும் அருகே சென்று பார்க்கும் நிகழ்வுக்கு 'மெயிட் ஒப்த மிட்ஸ்' எனஅழைக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள வானவில் பாலம் கனடாவையும், அமெரிக்காவையும் இணைக்கிறது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் விசுகான்சின் என்ற பனியாற்றின் மூலமே இந்த ஆறும், சில பேரேரிகளும் உருவானது. இந்த அருவி நீரை கட்டுக்குள் கொண்டுவர 1759லேயே முயன்றுள்ளனர். நயாகரா பெயர் வரக்காரணம் 'நயாக்கராராகே' என்ற பழங்குடியினர் அங்கு வாழ்ந்ததால், அல்லது பழங்குடிகளின் நகரான 'ஓங்னியாகரா' என்ற பெயரிலிருந்து வந்திருக்கலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர். 2007ம் ஆண்டில் மட்டுமே 2கோடி பேர் பார்த்துள்ளனர். 2009ல் அது 2.8 கோடியாக மேலும் உயர்ந்தது. 1846ம் ஆண்டிலிருந்தே இப்பகுதியில் நடக்கும் 'மெய்ட் ஒப் திமிசுடு' என்ற படகோட்டம் மிகப்பிரபலமாகும். நயாகரா இயற்கையின் வரமாகும்.

## கடந்த 24.04.2016 அன்று நெடுங்கேணி வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் சித்திரை புத்தாண்டு விளையாட்டு விழாவின் பதிவுகள்










உடனடி வேலைவாய்ப்பு

பத்திரிகை விற்பனை முகாமையாளர்கள் உடன் தேவை. தகுதியான சம்பளம்

நேரில் வரவும்

தினப்புயல்

154A, 6ஆம் ஒழுங்கை,தேக்கவத்தை,வவுனியா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 01.05.2016 அன்று வெளியிடப்பட்டது.